

அமரர்

## திருமதி சின்னத்தங்கம் பரமநாதன்

அவர்களின்

நினைவாக வெளியிடப்படும்

# தங்க மலர்

26.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும்
உரும்பிராயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன்

அவர்களின்

நினைவாக வெளியிடப்படும்

# தங்க மலர்

**26.12.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் சிகரமாய்
அணையாத தீபமாய்
அனைவருடனும் பாசத்துடனும்
நேசத்துடனும் பழகி இறக்கும் வரை
இன்முகத்தினராய் அறநெறி நடந்து,
குடும்பத் தலைவியாய் இருந்து எமைக்காத்து,
வளர்த்து, உயர்வளித்து இறைவனடி சேர்ந்த
அமரர் **திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன்**
அவர்களின் நினைவாக இந்த நினைவு மலரை
அன்னாரின் பாதார விந்தங்களில்

**கண்ணீரோடு சமர்ப்பிக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."



அன்னை மடியில்
07.10.1933

ஆண்டவன் அடியில்
26.11.2015

அமரர்

# திருமதி சின்னத்தங்கம் பரமநாதன்

அவர்கள்

## திதி வெண்பா

மன்மத வருடம் தமிழர் மாவீரரைப் போற்றும் கார்த்திகையில்
அபரபக்க பிரதமையாம் திதியில் - கடின உழைப்பால்
உன்னதமான கல்விமானாய் ஆசானாய் திகழ்ந்த
மாதருள் மாணிக்கம் சின்னத்தங்கம் அடைந்தாள் சிவபதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
　　எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்(று) ஓர் களைகண் இல்லேன்
　　கழல் அடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
　　ஒக்க அடைக்கும் போ(து) உணர மாட்டேன்
புண்ணியா! உன் அடிக்கே போதுகின்றேன்
　　பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
　　கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
　　மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
　　திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
　　குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
　　பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
　　மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
　　சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
　　பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

காரணமதாக வந்து புவி மீதே
காலன் அணுகாதிசைந்து கதிகாண
நாரணனும், வேதன்முன்பு தெரியாத
ஞான நடமே புரிந்து வருவாயே
ஆரமுத, மான தந்தி மணவாளா
ஆறுமுகம், ஆறிரண்டு விழியோனே
சூரர் கிளை, மாள வென்ற கதிர்வேலா
சோலை மலை, மேவிநின்ற பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர்

# திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன்

அவர்களின்

# வாழ்க்கைத் தடம்

இந்து மகா சமுத்திரத்தின் முத்தென வர்ணிக்கப்படும் ஈழத்திரு நாட்டின் சிகரமாய் திகழும் யாழ்ப்பாணம் எனும் புனித பூமியில், மங்களம் தரும் வெற்றிலை கொழுந்துவிட, சைவமும் தமிழும் போற்றி வளர்ந்திடும் கொல்லங்கலட்டி எனும் கிராமத்தில், மூத்ததம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதியினருக்கு ஐந்தாவது குழந் தையாக **07.10.1933** அன்று அவதரித்தார் சின்னத்தங்கம். நவரத் தினமாய் தோன்றிய ஒன்பது குழந்தைகளின் நடுநாயகியாக, நடராசா, தங்கமுத்து, செல்லமுத்து, பாக்கியலட்சுமி, பாலசிங்கம், இராசமணி, சிவசுப்பிரமணியம், முருகையா ஆகியோருக்கு சகோதரியாகத் திகழ்ந்தவர் சின்னத்தங்கம்.

## கல்வி

தனது ஆரம்பக்கல்வியை பன்னாலை சேர் சனகசபை வித்தி யாலயத்தில் தொடங்கி புலமைப்பரிசில் பெற்று இரண்டாம் நிலைக் கல்வியை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் (Stanley College) தொடர்ந்து, உயர்தரத்தை மகாஜனாக் கல்லூரியில் பூர்த்தி செய்தார். கணிதத்தில் புலியாகத் திகழ்ந்த சின்னத்தங்கம், **1956** ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் பொறியியல் பீடத்திற்குத் தகுதி பெற்ற போதிலும். அன்றைய காலத்தில் பெண்கள் பொறியியல் பீடத்திற்கு அனுமதிக்கப்படாமையால் கொழும்பு விஞ்ஞானபீடத்துக்குத் தெரிவாகினார். **1959** ஆம் ஆண்டு கணிதத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்று சிலோன் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) விஞ்ஞானமாணி (B.Sc.) பட்டம் பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சேவை

தனது கல்விச்சேவையை கணித ஆசிரியராக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் 1959 ஆம் ஆண்டு ஆரம்பித்து, 1960 இல் இடமாற்றம் பெற்று திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரியில் தொடர்ந்தார். அவரது ஆர்வமும் விவேகமும் அறிந்துகொண்ட பாடவிதான அபிவிருத்தி மையம் (Curriculum Development Center) 1963 ஆம் ஆண்டு தனது கணித பாடத்திட்ட அணியில் சின்னத் தங்கத்தை இணைத்துக்கொண்டது. 1964 இல் புலமைப்பரிசில் பெற்று ஐக்கிய அமெரிக்காவின் ஆஸ்டின் நகரில் உள்ள டெச்சாஸ் பல்கலைக்கழகத்திற்கு (University of Texas - Austin) உயர் படிப்பிற்காகச் சென்றார். படிப்பு முடிந்து மீண்டும் நாடு திரும்பிய அவர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்குள் (Educational Publication Department) உள்வாங்கப்பட்டார். போட்டிப் பரீட்சை அடிப்படையில் பொது சேவைகள் ஆணைக்குழு சின்னத்தங்கத்தை கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கணிதபாட செயலாளராக 1969 ஆம் ஆண்டு நியமனம் செய்தது.

## திருமணம்

1972 வைகாசி மாதம் 27 ஆம் நாள் உடுவிலைச் சேர்ந்த சுப்ரமணியம் - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனான பரமநாதனை மாவைக்கந்தன் ஆலயத்தில் கை பற்றினார். இல்லற வாழ்வை நல்லறமாகக் கருதி அதன் பயனாக 1973 கார்த்திகை மாதம் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தனர். அக் குழந்தைக்கு தயாபரன் என்று பெயரிட்டு கண்ணன் என்று செல்லமாக அழைத்தனர். பரமநாதன் கொழும்பு, கோட்டை நகராட்சி மண்டபத்தில் வேலைமாற்றம் பெற்றதும் குடும்பமாக இராஜகிரி எனும் நகரில் வாழ்க்கையை ஆரம்பித்தனர்.

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற்கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை**

இரக்க குணம் பொருந்தி, குடும்ப வரவுக்கு ஏற்றவாறு செலவு செய்து இல்வாழ்க்கையை நடாத்துபவளே உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியாவாள் என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய வாழ்ந்தவர் சின்னத்தங்கம்.

## மீண்டும் உயர்கல்வி

கணிதத்தில் உயர்நிலை சான்றிதழ் பட்டம் பெறுவதற்காக 1975 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள கீல் பல்கலைக்கழகத்திற்கு (University of Keele) சென்று அங்கு அதிவிஷேட சித்தியுடன் பட்டம் பெற்றார். ஆசியாவிலிருந்து இக்கற்கை நெறியில் பங்குபற்றி சித்தியடைந்த வர்களில் அதிவிஷேட சித்தி பெற்ற ஒரே ஒருவர் சின்னத்தங்கமாவார். அவரது திறமையைப் பாராட்டி அவரது பேராசிரியர் தன்னுடன் கலாநிதி பட்டத்திற்கான ஆராய்ச்சியில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கிய போதும் கடமை நிமித்தம் நாடு திரும்ப வேண்டிய நிலையில் சின்னத்தங்கத்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மீண்டும் நாடு திரும்பி கல்வி வெளியீட்டு திணைக்களத்தில் கணித பாட செயலாளராகக் கல்வி அமைச்சால் வழங்கப்படும் இலவச பாட நூலின் பதிப்பாசிரியராகக் கடமையாற்றினார்.

## இனக்கலவரம் (கறுப்பு ஜுலை)

1983 ஆம் ஆண்டு ஆயிரம் ஆயிரம் தமிழர்களைக் காவுகொண்ட இனக்கலவரம் இவர்களையும் விட்டுவைக்கவில்லை. சிறிது சிறிதாக கடின உழைப்பால் தேடிப்பெற்ற செல்வமும் உடமைகளும் கண்ணெதிரே நெருப்புக்கு இரையாக உயிரை மட்டும் கையில் பிடித்து வீட்டிலிருந்து ஓடி வெலிக்கடை போலீஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்தனர். அங்கிருந்து அகதிமுகாமிற்கு மாற்றப்பட்டு அரசாங்க சேவையாளர்களாகத் தமது வாழ்நாள் முழுதும் சேவையாற்றிய சின்னத்தங்கம் - பரமநாதன் இருவரும் சொந்த நாட்டில் அகதிகளாக்கப்பட்டனர். உடமை எல்லாம் இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நின்ற சின்னத்தங்கம் - பரமநாதன் குடும்பமும், அணைத்து தமிழ் குடும்பங்களும் மந்தைகள் போல பொதியேற்றும் கப்பலில் தமது பூர்விக தாயகமான வடக்கு - கிழக்கிற்கு அனுப்பப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண நிகழ்வின் போது (1972)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண நிகழ்வின் போது (1972)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் யாழ்ப்பாணம்

அகதியாய் பிறந்த ஊர் திரும்பிய பரமநாதன் குடும்பம் வலிகாமம் வடக்கில் சின்னத்தங்கத்தின் பிறந்த இடமான கொல் லங்கலட்டியில் அவரது வீட்டைத் திருத்தி குடியேறினார்கள். சின்னத்தங்கத்தின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள பதவி இடமாற்றம் செய்ய முடியாது என்பதாலும் அதே நிர்வாக தரத்தில் வேறு தொழில் வாய்ப்பு யாழ்மாவட்டத்தில் வழங்க முடி யாமையாலும் அவரைக் கொழும்புக்கு வருமாறு கல்வி அமைச்சு நிர்ப்பந்தித்தது. கொழும்பு தந்த வேதனை நினைவுகளையும் குடும்பப் பொறுப்புக்களையும் மனத்தில் நிறுத்தி கல்வி அமைச்சின் வேண்டுகோளை நிராகரித்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தற்காலிக விரிவுரையாளராக நியமனம் பெற்றார். தனது கல்விச் சேவையை ஆசிரிய மாணவர்களைத் தயார் செய்வதில் தொடர்ந்து, 1991 ஆம் ஆண்டு தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

## தொடர் இடம்பெயர்வு

இலங்கை இராணுவம் வலிகாமம் வடக்கை முன்னேறிய போது நடாத்திய அகோர எறிகணைத் தாக்குதலால் 1990 ஆம் ஆண்டு கொல்லங்கலட்டியில் சொந்த வீட்டையும் உடைமைகளையும் விட்டு சங்கானை நோக்கி ஓட வேண்டியதாயிற்று. பரமநாதனின் நண்பர் பத்மராஜா வீட்டில் தஞ்சம் புகுந்து மீண்டும் நிலைமை சரிவர போகலாம் என்ற நம்பிக்கையில் வாரங்கள் உருண்டோடின. பின்னர் அங்கிருந்து பரமநாதனின் தங்கை மீனா வின் வீட்டில் தற்காலிகமாக தமது வாழ்க்கைய ஆரம்பித்தனர். மகனின் கல்வி முன்னேற்றத்தைச் கருதி மகன் கல்வி கற்ற சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு (St. John's College) அருகாமையில் சுண்டிக்குளியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து புது வாழ்க்கை தொடங்குவதற்காக தேவையான தளபாடங்களையும் வாங்கிக் கொண்டனர். 1994 ஆம் ஆண்டு இவர்கள் இருந்த வீடு கைமாற இருபாலையில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து அங்கு குடியமர்ந்தனர். 1995 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற மீண்டும் அகோர எறிகணைத் தாக்குதலை நடாத்த இருபாலை விட்டு ஓடி நல்லூரில் பரமநாதனின் அண்ணன் தமையன் தியாகராஜா வீட்டில் சில வாரமும் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து கைதடியில் சின்னத்தங்கம் அவர்களின் நண்பி அமரர் திருமதி குமாரசுவாமி (கிருஷாந்தி குமார சுவாமியின் தாயார்) வீட்டில் சில மாதங்களுமாக அகதி வாழ்க்கை தொடர்ந்தது. மீண்டும் யாழ்ப்பாணம் வரும் சூழ்நிலை வந்து திரும்பிய போது இருபாலை வீடு சூறையாறப்பட்டிருந்தது. மீண்டும் எல்லாம் இழந்த நிலையில் மகன் யாழ்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதால் அதற்கு அருகாமையில் திருநெல்வேலியில் (கொக்குவில் கிழக்கு) குடியேறினர். மாறி மாறி நாட்டின் சூழ்நிலை காரணமாக தமது சொந்த மண்ணிலேயே அகதியாய் வாழும் நிர்ப்பந்தம் தமிழரான சின்னத்தங்கத்தையும் விட்டுவைக்கவில்லை. தான் கஷ்டப்பட்டு கொல்லங்கலட்டியில் கட்டிய வீடு தரைமட்டமாய் இருப்பதை அறிந்த அவர் மனம் பட்ட வேதனை சொல்லில் அடங்கா.

## மகனின் திருமணம்

யாழ் பல்கலைக்கழகத்தில் பல விருதுகளுடன் பட்டம் பெற்ற மகனின் பட்டமளிப்பு விழா நிறைவு பெற்று அவர் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பதவி பெற்றதும் அவருக்கு உரும்பிராயைச் சேர்ந்த திருநாவுக்கரசு - மதுரைநாயகி தம்பதியரின் புதல்வி விஜிதாவைத் திருமணம் செய்து வைத்தனர்.

## அமெரிக்கப் பயணம்

தனது மாணவர்கள் போலவே தனது மகனையும் ஒரு கல்வி மான் ஆக ஆக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் சின்னத் தங்கம். தனது எண்ண அலைகள் நனவாவதைக் கண்டுகளிக்க மகனின் கலாநிதி பட்டமளிப்பு விழாவுக்கு அமெரிக்காவின் பழம்பெரும் நகரான பொஸ்டன் (Boston) நகருக்குச் சென்றார்.

> "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
> சான்றோன் எனக்கேட்ட தாய்"

அங்கிருந்து நியூயோர்க் (Newyork) மாநகரம் மற்றும் அமெரிக்க தலைநகரான வாசிங்டன் DC (Washington D.C) ஆகிய நகரங்களையும் பார்வையிட்டு நாடு திரும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Son's PhD Graduation – Boston



Wedding Anniversary Celebration in Boston

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



US Capitol – Washington D.C.



United Nations Head Quarters – New York

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இறுதி நாட்களில் நடமாட உதவி நாடி நின்ற சின்னத்தங்கம் வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைத்தவர். வேறு எவரிலும் தங்கி வாழ விரும்பாதவர். அதனால் என்னவோ நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்ட சில மாதங்களில் சிவபதம் அடைந்து விட்டார். அவரை அறிந்த எவரைக் கேட்டாலும் அவர் கடின உழைப்பையே உதாரணமாகக் காட்டுவார்கள். கஷ்டம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தாலும் கடின உழைப்பால் முன்னேறலாம் என்பதற்கு முன்னுதாரணமாக இருந்தவர். பெண்கள் கல்வி உரிமை கேள்விக்குறியாக இருந்த காலத்தில் ஒரு சாதாரண விவசாயியின் மகள் பல்கலைக்கழகம் செல்லமுடியும் என மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தவர். தனது மாணவருக்கும், மகன், பெறாமக்கள் மற்றும் மருமக்களுக்கும் ஒழுக்கமும் நேரந்தவறாமையும் மீண்டும் மீண்டும் அறிவுறுத்திய சின்னத்தங்கம் தான் அதற்கு ஒரு எடுத்துக்காட்டாகச் செயற்பட்டார். தனது கணவர் ஆற்றிய பொதுச்சேவைகளுக்கு உறுதுணையாய் செயற்பட்டவர். தமிழருக்கே உரித்தான விருந்தோம்பலும் அவரது அருங்குணங்களில் ஒன்றாகும். இத்தகைய பெருந்தகை இறைவனின் திருவடியில் நித்யானந்தத்தில் திளைத்திருப்பார் என்பதில் எள்ளளவு ஐயமும் இல்லை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



"Education is the manifestation for perfection already in man"

- Swami Vivekananthar-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல்கள்...

"பெயரோ சின்னத்தங்கம்!
எவருக்கும் செய்ததில்லை பங்கம்!
கணித மேதைகளின் சங்கம்!
எதிர்ப்பவர்க்கோ பெண் சிங்கம்!"

## கணவன்

கொல்லங்கலட்டி ஈன்ற கணிதமேதை!
உன்னால் பிறந்த மண் பெற்றது பெருமை!
நல்லாசிரியையாய்... விரிவுரையாளராய்...
செயலாளராய்... அளப்பரிய சேவைகளாற்றி
விருதுகள்... புலமைப்பரிசில்கள் பெற்று....
உலகை வலம் வந்த
சாதனை நாயகி!
பார் புகழ வாழ்ந்த
மாதர்குல மாணிக்கம்!
என் இனிய இல்லத்தரசி!
ஓய்வு பெற்று... நிரந்த ஓய்விற்காய்....
நீர்க்குமிழி வாழ்க்கையின்
சீர்க்கோலம் சிதைந்ததென்ன?
பாரினில் யாரினி என் துணை?
தரணியில் தனியனானேன்.....!
வாழ்க்கையில் மட்டுமன்றி
பொதுச் சேவையிலும் கைகோர்த்தாய்!
இனியென் கைபிடித்து நடப்பார் எவர்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன்

பிரிந்த பின் தான் தெரிகிறது
சேர்ந்திருக்காமையின் வலி!
உயிர் கொடுத்து.....
உதிரத்தைப் பாலாய்க் கொடுத்து
கணிதத்தைக் காதலிக்கவும் கற்பித்து
என்னையோர் கணிதவல்லுநனாக்கி....
தூக்கி வளர்த்த
என் அம்மா, நீங்கள்....
என் மகளாக வேண்டும்!

## மருமகள்

மருமகளை... 'மறு' மகளாய்ப்
பாராட்டிச்.... சீராட்டி....
வேலைக்குப் புறப்படுகையில்...
வேண்டியவை செய்து நிதம்
அன்னையிலும் மேலாய்...
அரவணைத்ததை நான் மறவேன்!
உங்கள் அருகிருக்க நாம்
கொடுத்துவைக்காமற் போனோம்!

## சகோதர, சகோதரிகள்

வழிந்தோடும் விழிநீரில்...
குளிக்கின்றோம் உன் பிரிவால்....
அன்பான சகோதரியாய்...
பண்பான மகளாய்...
எம் பெற்றோருக்கும் மற்றோருக்கும்
பெருமை சேர்த்த சகோதரியே!
பெற்றவர் இடத்தையே
தேடி நீ சென்றனையோ!
தவறவிட்ட தருணங்களை
உணர்த்தும் உன் பிரிவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் / மைத்துனிமார்

நிலவுலகம் நீத்து
நீள்துயில் கொண்டாலும்
பாரதி சொன்னது போல்
"நெஞ்சில் உரத்துடனும்,
நேர்மைத்திறத்துடனும்"
வஞ்சனை செய்யாமல்
வாழ்ந்த சாதனைப் பெண்மணி!
சோதனைகளில் மனந்தளராமல்
சோதனைகளுக்கே பாடம் சொன்னவர்!

## பெறாமக்கள்

இனக்கலவரத்தில்
வீடிழந்து, சொத்திழந்து,
உயர்பதவி துறந்து, யாவுமிழந்தும்...
உற்றதுணையும், பேர்சொல்ல மகனும்
அன்பு காட்ட பெறா மக்களாய்...
நாங்களும்... போதுமென்று
இன்முகம் காட்டி
நிறைகுடமாய்.... வாழ்ந்தீர்கள்!
பிறந்த ஊரில் உயிர் பிரியக்
கொடுத்து வைக்காமற் போனீரே!

## மருமக்கள்

மரணமே விடுதலையாய்ப்
பறந்து போனதோர் உயிர்ச்சிறகு!
காலச்சுவட்டினிலே
இன்னுமோர் புதிய பதிவு!
நற்பிரசையாய்....
இனிய சினேகிதியாய்....
பழகுவதற்கினியவராய்....
இன்று சொல்லாமற் போனதெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் / பூட்டப்பிள்ளைகள்

பாசத்தின் உறைவிடமாய்....
நேசத்தின் இலக்கணமாய்...
வீசு தென்றலாய்ப் பரிணமித்த
எம் பேர்த்தி / பூட்டி!
கவிதை எழுதுகையில்
காகிதம் எரிந்ததுபோல்
நிகழ்ந்தது உங்கள் பிரிவு!

## உற்றார், உறவினர், நண்பர்கள்

சொல்லாமல் வந்த எமன்
நில்லாமல் உயிர் கொண்டு சென்றான்
கொண்டு சென்றது நம் உறவையும்தான்!
பலர் வாழ்வு சிலகாலம்!
உன் வாழ்வோ வரலாறு!
அது கணிதத்தின் வரலாறு!
கலாசார கட்டுப்பாடுகள்....
உன் பொறியியற்பட்டத்தை
பௌதீகவியற்பட்டமாக்கிய கொடுமை!
எனினும் ஆல்போல் தழைத்து,
அறிவால்.....
அறுகுபோல் பெருகி
உச்சம் தொட்டாய்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு பெரியமாமியே!

உடல் கூடு விட்டு உங்கள் உயிர்
இறைவனடி நாடினும் - நீங்கள்
விதைத்துச் சென்ற நினைவுகள்
ஆலவிருட்சமாய் நிலைத்திடும் நெஞ்சினிலே!

அன்னையாய் அரவணைத்து
தந்தையாய் கண்டித்து
ஆசானாய் ஞானம் அளித்து - நீங்கள்
என்னை வளர்த்த அந்தப் பொற்காலம்
மறவேன் நான் வாழும் காலம் வரை!

"பால் அப்பம்' கேட்ட போதெல்லாம்
அன்பைப் கலந்து ஆசையோடு பரிமாறுவீரே!
உங்கள் கைப்பக்குவம் கண்ட காலன்
இந்த உலகம் விட்டு கூட்டிச் சென்றானோ?

உங்களுக்கேயான அஞ்சா நெஞ்சமும்
தளரா மன உறுதியும் - எதற்கும் துணிந்து
முன்னின்று செய்யும் செயலும் - நீங்கள்
எமக்காய் விட்டுச்சென்ற பெரும் செல்வங்கள்!

கண்ணுக்குத் தோன்றிய உங்கள் திருவுருவம்
தேவதையாய் விண்ணகம் நாடினும்
என்றும் நீங்கள் எம் இதயக்கோவிலில்
வழிகாட்டும் அகழ் விளக்காய் பிரகாசிப்பீர்கள்!

**அன்புடன் மதுரன்**
மருமக்கள், பெறாமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை துணை

# கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீநகுலேஸ்வரசுவாமி கோவில்

## KEERIMALI SRI NAGULAMBIGA SAMETHA SRI NAGULESWARA SWAMY TEMPLE

*Rajarajasri K. Naguleswara Kurukkal J.P* — **ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள்**

Governing Authority & Chief Priest,
Naguleswaram, Keerimalai,
Kankesanthurai.
Sri Lanka

**Phone : 021 790 0470**
**021 321 2440**



**ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்**
**நகுலேஸ்வரம்,**
**கீரிமலை,**
**காங்கேசன்துறை.**
**ஸ்ரீலங்கா**

## பிரார்த்தனை உரை

அமரர் திருமதி சின்னத்தங்கம் பரமநாதன் அவர்கள் இறைவன் திருவடிகளை அடைந்த செய்தி எமக்கும் எமது தேவஸ்தானம் சார்ந்த அனைவருக்கும் பெருந்துயர் தருவதாக அமைந்தது.

திரு. திருமதி பரமநாதன் தம்பதியர் இவ்வாலயம் போர்க்காலத்தில் இருந்து முற்றாகச் சேதமடைந்து மீண்டும் புனரமைக்கப்படவும், மீள் குடியேற்றம் கீரிமலையில் வருகை தந்து வழிபடுவதற்கு அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து வழிபடுவதற்கு பெரும் பங்காற்றி உள்ளனர்.

அமரர் சிவதொண்டாக ஆற்றிய பணிகள் பல, சிறந்த கல்வியாளராக, கணிதபாட விற்பன்னராக, ஆற்றல் மிக்க ஆசிரியையாக, பாசம் மிகுந்த மனைவியாக, நிறைவான தாயாக வாழ்ந்து சிவன் பாதங்களைச் சேர்ந்துள்ளார்.

அன்னாரின் பிரிவுத்துயர் காரணமாக நெகிழ்ந்து போயுள்ள அன்னாரின் கணவர், மகன் மற்றும் குடும்பத்தார் அனைவருக்கும் நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமிகளின் அருளாசிகளை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**ராஜராஜஸ்ரீ. கு. நகுலேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகர்த்தா நகுலேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
## MAVIDDAPURAM SRI KANTHASWAMY TEMPLE

மஹாராஜஸ்ரீ
து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீன கர்த்தா - பிரதமகுரு,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
ஸ்ரீலங்கா

T.P: 021 3210349

Maharajasri:
D.S.Ratnasabapathy Kurukkal
*Governing Authority & Chief High priest*
*Mavai Audheenam,*
*Maviddapuram,*
*Tellippalai.*
*Sri Lanka.*

Date: 14/12/15

# ஆத்மசாந்தியுரை

அமரர் அன்னை சின்னத்தங்கம் பரமநாதன் அவர்கள் சிறந்த சிவபக்தர் ஆவார். இவர் இளமையில் கல்வியாலுயர்ந்து பல பதவிகளை வகித்தவர் ஆவார். அதிலும் எம் மாவை முருகன் மீது அதிக பக்தி உள்ளவர். மாவைக்கந்தன் ஆலயத்தின் முன்னேற்றத்திற்காக அவர்கள் தம் குடும்பத்தினர் அயராது பணி பல செய்கின்றனர். அதுமட்டுமல்ல பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்திய பேறும் உடையவர். இதனாலேயே

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற வழி மனைமங்கல மாட்சி கண்டவர்.

என்ன செய்வது '' வகுத்தான் வகுத்த வழியல்லால்'' வேறுவழியுண்டோ? என்று இம்மண்ணிற் பிறந்தோமோ அன்றே அவன் அழைக்கும் திகதியையும் எழுதி வைத்துள்ளான் அதுவே விதி எனப்படும். ஆகவே நோயுற்ற உடல் நலிந்து வாடாது அவனே அழைத்துக் கொண்டான் என்று ஆறுவோமாக. அன்னாரின் ஆத்மா மாவை முருகன் திருவடியில் சாந்தி காண இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இங்ஙனம்**

**மஹாராஜஸ்ரீ து. ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்**

ஆதீனகர்த்தா, மாவையாதீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கீரிமலை நகுலேஸ்வரம் ஆதீனகர்த்தா நகுலேஸ்வர குருக்களின் மணிவிழாவில்



குடும்ப வைரவர் ஆலய கும்பாபிஷேகத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
06.12.2015

## அனுதாபச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு,

திருமதி பரமநாதன் சின்னத்தங்கம், இவருடைய மறைவு அனைவருக்கும் மனவேதனையை தந்துள்ளது. நிறைவான வாழ்க்கை வாழ்ந்த அம்மையார் எடுத்துக் கொண்ட விடயங்களை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் செயல் வடிவம் கொடுக்கும் திறமையுடையவர்.

அரசகடமைகளையும், வீட்டுக் கடமைகளையும் சிறப்பாக செய்து அனைவரின் மதிப்பையும் பெற்றுள்ளார். திரு. பரமநாதன் சமய தொண்டு நிறுவனங்களிலும் முன்னின்று நடாத்தும் இவர் தொண்டு, பரமநாதனின் பணிகள் மறைமுகமாக இருந்தமையால் இன்று வெளிவருகின்றது. கணவருக்கு நல்ல மனைவியாகவும், பிள்ளைகளுக்கு நல்ல தாயாகவும் இருந்த இவருடைய மறைவு குடும்பத்தினரை மட்டுமன்றி எல்லோரையும் மன வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

பரமநாதனின் பணிகள் தொடரவும் திருமதி பரமநாதன் சின்னத்தங்கம் இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போமாக!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
இரண்டாம் குருமஹாசந்நிதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Message from the Bishop of Jaffna

I was saddened to hear the death of Mrs. Sinnathankam Paramanathan rather lately. As I was busy with the preparation of the ordination, I did not get the information in time to be present at the funeral of Mrs.Sinnathankam. My deepest sympathies to Mr. Paramanathan , his son and other relatives.

Mrs. Sinnathankam has been a very good wife and a loving mother. As her name depicts, she is not a "sinnathankam", but a "periya thankam" because of her sterling qualities. Mr. Paramanathan was able to engage in a lot of social service to the Jaffna community because of his devoted wife who never complained about his movements to Jaffna and other places to serve the needy communities. Without any hesitation, he would come forward to speak to authorities concerned about the unjust things. All this he was able to do because of his dear and loving wife. As the saying goes, 'behind every successful man stands a woman', and that is proved true in the case of Mr.Paramanathan who had been successful in serving the community.

Mrs. Sinnathankam had been an educationist par excellence. She started her life as a teacher and continued to rise in the ladder of education and been on scholarships to other countries to further her education. All that experience had helped her to serve her to serve the children. May God Almighty grant her the reward of living in eternity with Him.

Once again, I convey my deepest sympathies to Mr.Paramanathan and his son. May God be with them and strengthen them to continue their life here.

**Right Revd. Dr. Justin B Gnanapragasam**
*Bishop of Jaffna,*
*Bishop's House, Jaffna,*
*Sri Lanka.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சொற்செல்வரின் பிராத்தனையுரை

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து, இறைவன் திருவடிக்குச் சென்ற திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன் அவர்களின் ஆத்ம சாந்திக்காக துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறேன். சகலசெல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்து, கல்வியால் உயர்ந்து, மனதாளத்தின் வேராக விளங்கிய அம்மையாரின் பிரிவு பலரை வருத்துகிறது. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் முதல் பல்கலைக்கழகம் சென்ற மாணவி என்ற பெருமைக்குரியவராவர். அவர் பண்பாலும், பக்தியாலும், கடமை உணர்ச்சியாலும் வாழ்வில் பல வெற்றி களைச் சந்தித்தவர். உடுவிலில் மிகச் சிறப்பாக வாழ்ந்த குடும்பத்தின் தலைமகன் திரு. பரமநாதன் அவர்களைக் கரம் பற்றி அவரின் சேவைகளுக்கு மிகுந்த பக்கத் துணையாக விளங்கியவர்.

மும்மொழியில் பாண்டித்தியமுடைய கல்வியாளராக விளங்கிய அமரர் பலருக்கு வழிகாட்டியாக விளங்கியவர். மக்கள் சேவையே மகேசன் சேவையென இருபத்திநான்கு மணித்தியாலமும் எம் மண்ணில் மக்களுக்காக உழைக்கும் உயர் திரு. பரமநாதன் அவர்களின் சேவையை போற்றாதவர்களில்லை. அவர்களின் வெற்றிக்கு மூல காரணமாக விளங்கியவர் அமரர் அவர்கள். தனது ஏக புத்திரனை சிறந்த கல்விமானாக்கியவர். எவரையும் நல்லன வண்ணம் உபசரித்த அம்மையாரின் பிரிவு ஈடுசெய்ய முடியாதது எனச் சொல்வோம். பிறப்பும் இறப்பும் இயற்கை. வாழ்நாளை சரியாகப் பயன்படுத்துவதே பிறப்பின் வெற்றி. வாழ்நாளைப் பயன்மிக்க நாள்களாக பயன்படுத்தி அம்மையார் பாக்கியசாலி. அன்னாரின் ஆத்மா நிரந்தர ஆறுதல் பெற வேண்டி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
இளைப்பாறிய அதிபர்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
J/Mahajana College Tellippalai

T.P 021 321 4004
021 205 9293

E.Mail : jayamahajana2010@gmail.com
Web : www.Mahajana College.lk

Principal

## வரலாற்று நாயகியின் இழப்பு

கல்லூரி மாதா தன்னுடைய அருந்தவப் புதல்வி ஒருவரை இழந்து கண்ணீர் வடிக்கிறாள். அமரர் திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன் அவர்களுடைய பிரிவுச் செய்தி கேட்டு துயருற்ற மகாஜனங்களில் நானும் ஒருவன். மூத்ததம்பி தெய்வானைப்பிள்ளையின் மகளாக தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் அவதரித்த இவர் மகாஜனக் கல்லூரியின் பெண்களைக் கொண்ட முதல் வகுப்பு மாணவர்களாவார். அதுமட்டுமல்ல மகாஜனக் கல்லூரியின் (1956) முதல் பெண் விஞ்ஞானப் பட்டதாரியுமாவார். கணிதத் துறை, பொறியியல் துறைக்கு தெரிவு செய்வதற்குரிய தகுதிகள் இருந்தும் அன்றைய கலாசார நிலை காரணமாக அக்காலப்பகுதியில் பெண்கள் பொறியியல் துறைகளில் சேர்ந்து கொள்ள விரும்புவதில்லை.

கல்லூரியில் கற்ற காலத்தில் சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனையாக திகழ்ந்ததோடு கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி மகாஜனக் கல்லூரியின் மேன்மைக்காக உழைத்திருந்தார். சிறந்த ஒரு கணித ஆசிரியராக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் (1959), திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரியிலும் (1960) கடமையாற்றியிருந்தார். பெண்கள் கல்விக் கூடங்களுக்கு சென்று கல்வி கற்பதை ஊக்குவிக்க மறுக்கும் அக் காலப்பகுதியில் துணிந்து கல்வியில் நாட்டம் கொண்டு இடைவிலகாது உயர்நிலைக்கல்வி பெற்றதோடல்லாமல் உயர் பதவிகளை வகித்து பெண்களுக்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963இல் கொழும்பில் அமைந்திருந்த கல்வி அபிவிருத்தி (கலைத்திட்டம்) நிலையத்தில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். 1964 இல் மூன்று மாத கால புலமைப் பரிசில் ஒன்றைப் பெற்று மேலதிக தேடலுக்காக அமெரிக்காவில் உள்ள Texas Austin பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்தார். 1966 இல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துடன் இணைந்திருந்தார். 1969 இல் பொதுச்சேவை ஆணைக்குழுவால் செயலாளராக (கணிதம்) நியமிக்கப்பட்டிருந்தார். 1975 இல் கணிதத்தில் உயர் பயிற்சி நெறி ஒன்றை தொடரும் பொருட்டு புலமைப்பரிசில் பெற்ற இலண்டன் Keele பல்கலைக்கழகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார். அது மட்டுமன்றி அங்கு கற்ற மாணவர்களில் திறமைச் சித்தி பெற்ற (Merit Pass) ஒரே ஒரு ஆசியன் என்ற பெருமை தேடிக் கொடுத்திருந்தார்.

1983 இல் ஏற்பட்ட கலவரங்களையடுத்து யாழ்ப்பாணம் திரும்பி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் தன்னை இணைத்துக் கொண்டு கணிதத் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட காரண கர்த்தாவாக விளங்கியிருந்தார். 1990 இல் ஓய்வு பெற்று பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்திருந்தார். அத்தோடு அன்றைய காலத்தில் கொழும்பு பழைய மாணவர் சங்கத்திலிருந்து பல பணிகளை பாடசாலைகளுக்குச் செய்துள்ளார். இவரது சமூகப் பணிக்கு இவரது கணவரான திரு. சுப்பிரமணியம் பரமநாதன் அவர்களும் ஊன்றுகோலாக அமைந்திருந்தார். இவரது கணவர் முன்னாள் மாவட்டச் செயலாளரும், இந்நாள் மனித உரிமை ஆணைக்குழுவின் ஆலோசகரும் என்பது யாவரும் அறிந்ததே. அமரர் சின்னத்தங்கம் அவர்கள் தான் செய்த பணியைத் தொடர தனது ஏக புத்திரனான தயாபரன் அவர்களை இவ்வுலகிற்குத் தந்துள்ளார். திரு.ப. தயாபரன் அவர்களைத் தான் கற்ற மகாஜனக் கல்லூரியிலேயே ஆரம்பக் கல்வி கற்க வழிப்படுத்தியிருந்தார். அதுமட்டுமல்லாது தன்னைப் போலவே தயாபரன் அவர்களையும் உயர்ந்த நிலைக்கு வர வழிப்படுத்திய ஒரு உத்தமத் தாய் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது திரு. ப. தயாபரன் அவர்கள் ஒரு உதவிப் பேராசிரியராக அமெரிக்கப் பல்கலைக்கழக மொன்றில் கடமையாற்றிவருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனன்கள் எல்லோருக்கும் பெருமை தேடித் தரக்கூடிய ஒரு விடயமாகும்.

ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து தனது விடாமுயற்சியாலும் ஒழுக்க விழுமியங்களாலும் தன்னையும் தான் சார்ந்த சமூகத்தையும் கற்ற கல்லூரியையும் உலகறியச் செய்த ஒரு புரட்சிச் பெண்ணை - ஒரு மகாஜனனை இன்று நாம் இழந்து நிற்பது வேதனை தருகின்றது. இருந்தபோதும் இயற்கையின் நியதிக்கு கட்டுப்பட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தவர்களுக்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. M. மணிசேகரன்**
அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

Mr.M.Manisehar[illegible]
Principal
J/Mahajana College
Tellippalai.



Arise, Awake, Stop not till the Goal is reached

- Swami Vivekananthar-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தால் உறவாடிய உத்தமி

மகாஜனக் கல்லூரியில் மாணவியாகக் கற்கும் காலத்தில் அறிமுகமாகி, பின்னர் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகத் தொழில் பார்க்கும் காலத்தில் மீண்டும் தொடர்பு ஏற்பட்டு, நெருக்கமான உறவாக மலர்ந்தது. நான் இடைநிலை வகுப்பில் (ஏழாம் வகுப்பில்) கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில், இவர், அக்காலத்தில் அரசினர் பாடசாலையாக விளங்கிய ஸ்ரான்லி கல்லூரியிலிருந்து, கணித விஞ்ஞான பாடங்களான, உயர்தரப் பாடசாலை தராதரப் தரப் பத்திர வகுப்பில் (H.S.C) கற்பதற்காக வந்து சேர்ந்தார்.

ஐந்தாம் வகுப்பில் நடக்கும் தெரிவுப் பரீட்சையில் (Seletion test) மிகத் திறமையாகச் சித்தியடைந்து அவர் இடைநிலைக் கல்வியை ஸ்ரான்லிக் கல்லூரியில் (கனகரத்தினம் மகா வித்தியாலம்) கற்று S.S.C யில் சிரேஷ்ட பத்திரத் தேர்வில் மிகச் சிறப்பான சித்தி அடைந்து அவர் உயர்தரக் கல்விக்காக மகாஜனக் கல்லூரிக்கு வந்து சேர்ந்தார்.

வகுப்பறைக் கல்வி முடிந்து மாலை வேளையில், அதுவும் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கு ஆயத்தமாகும் வேளையில், மாணவர்கள் எல்லோரும், விளையாட்டு மைதானத்தில் ஒன்றுகூடி பயிற்சியிலீடுபடுவர். விளையாட்டுப் போட்டிகளில் தாமும் பங்குபற்றி மற்றவர்களையும் உற்சாகப்படுத்தி பயிற்சியில் ஈடுபடுத்துவார். கல்லூரி வலைப்பந்தாட்டக் (Net Ball) குழுவில் ஒருவராக இருந்து போட்டிகளில் பங்குபற்றி, கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தவர்.

பல்கலைக்கழக புகுமுக தேர்வில் 1956ஆம் ஆண்டு இவர் பொறியியல் பீடத்திற்குத் தெரிவானார். மகாஜனக் கல்லூரியிலிருந்து பொறியியல்ப் பீடத்திற்குத் தெரிவானார். முதற் பெண்மணி இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவார். ஆனால் அக்காலத்தில் பெண்கள், பொறியியளாளராக வெளிக்கள வேலையில் ஈடுபடுவதால் உள்ள சிரமம் காரணமாக, இவர் விஞ்ஞான, கணித பிரிவில் கல்வியைத் தொடர்ந்தார்.

பட்டப்படிப்பை நிறைவு செய்து கொழும்பில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் தொழில் செய்தார். 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தால் அலைச்சற்பட்டு, தம் சொந்த பிறந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். தற்காலிக இடமாற்றம் பெற்று கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இணைக்கப்பட்டார். விரிவுரையாளர்களின் சம்பளத்திலும் கூடிய சம்பளம் பெற்று உயர்தர உத்தியோகத்தராக விளங்கிய பொழுதும், தம் அறிவை மாணவர் களுக்குப் போதிக்கும் ஆசிரியத் தொழிலை விரும்பி ஏற்று, ஆசிரிய கலாசாலையிலே ஓய்வு பெறும் காலம் வரை தொழில் புரிந்தார்.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில், ஆரம்பக் கல்வி நெறி ஆசிரிய மாணவர்களுக்கு கணித பாடத்தை மிக இலகுவாகப் போதித்து அவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெறவைத்தார். கணித பாடத்தைத் தெரிவுப் பாடமாக விரும்பிக் கற்றவர்களையும் சிறந்த பெறுபேறுகளை பெறவைத்தார். ஆசிரிய கலாசாலையில் அவருடன் பழகிய காலங்கள் மறக்க முடியாதவை. எனக்கு மூத்தவராக (Senior) இருந்த பொழுதும் என்னுடன் மிக இனிமையாகப் பழகுவார். எதையும் திட்டமிட்டுச் செய்வதில் வல்லவர். நல்ல ஆளுமை உடையவர். கள்ளமில்லா வெள்ளையுள்ளம் படைத்தவர். தன்னம்பிக்கை மிக்க மிகுந்த பொறுமைசாலி. அவரின் கணித மூளை காரியங்களைக் கச்சியத்மாகச் செய்து முடிப்பதில் வெளிப்படும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் தேர்த்திருவிழா காலங்களில் கையில் அர்ச்சனைத் தட்டுடன் அவரைக் காணலாம். திருக்கோயில் வழிபடுகையில் ஈடுபட்டு ஆன்மீகத்தையும் வளர்த்துக் கொண்டார். கொல்லங் கலட்டியில் அவரின் வீட்டுப் பூந்தோட்டத்தின் அழகு மறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அவரின் சொந்த ஊருக்கு, பிறந்து வளர்ந்த இடத்திற்குக் கடைசிக் காலத்தில் போக முடியாமல் போனது வருந்தத்தக்கது. ஆனால்

"தம்மின் தம் மக்கள் அறிவுடமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

எனத் திருவள்ளுவர் வாக்கிற்கமைய அவரின் செல்வப் புதல்வன் பெருங் கல்விச் சிறப்புடன் திகழ்வது, அவருடைய அறிவுடமைக்குத் தக்க வாரிசாகக் காணப்படுகின்றது.

அவரை இழந்து தவிக்கும் அவரது இனிய கணவருக்கும் அருமைப் புதல்வருக்கும் என்ன ஆறுதல் சொல்வதென்றே தெரியவில்லை.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைந்து இவ்வுலகு"

என்றார் பொய்யாமொழிப் புலவர். நேற்று இருந்தவர் இன்றில்லை என்றாலும் அவரின் நினைவுகள் பசுமையாக நெஞ்சில் நிலைக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கலாதேவி பொன்னம்பலம்**
முன்னாள் விரிவுரையாளர்,
அரசினர் ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

"நல்லதையே நினைப்போம் நல்லதையே செய்வோம்"
Be good, Do Good



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Tribute by the Rev. N.J. Gnanaponrajah, Principal, St. John's College

I was saddened to hear about the demise of Mrs Sinnathankam Parmanathan, who taught me when I was at the Teachers' College.

Mrs Parmanathan served with great devotion and love for her students. She had this special way about her that made her capable of reaching out to everyone in the class. She was a true mentor and was loved by all.

*"When we stride or stroll across the frozen lake,*
*We place our feet where they have never been.*
*We walk upon the unwalked. But we are uneasy.*
*Who is down there but our old teachers?*
*Water that once could take no human weight -*
*We were students then - holds up our feet,*
*And goes on ahead of us for a mile.*
*Beneath us the teachers, and around us the stillness."*

Mrs Parmanathan leaves behind a generation of student community who will never forget her life of dedication to the teaching profession.

I convey my heartfelt condolences to the members of her family. May her soul rest in peace!

*"We never lose the people we love, even to death... Their love leaves an indelible imprint in our memories. We find comfort in knowing that our lives have been enriched by having shared their love."* *- Leo Buscaglia*

**Rev N. J. Gnanaponrajah,**
*Principal, St John's College, Jaffna*
*17th Dec 2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SKANDAVARODAYA COLLEGE**

Kanderodai, Chunnakam.

2015./12./09

## "ஸ்கந்தா அன்னையின் அனுதாபச் செய்தி"

கல்வியிலும், செழுமையிலும் சிறப்புற்று விளங்கிய அமரர் திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன் அவர்கள் மறைந்த செய்தி ஸ்கந்தாவின் குழாமிற்கு மனச் சோர்வையும், துன்பத்தையும் கொடுத்தது. ஏனெனில் எமது கல்லூரியின் வளர்ச்சியிலும், சிறப்பிலும் என்றென்றும் பூரிப்படைந்து கொண்டு இருப்பவர்கள் சகோதரர்களான திரு.S.பரமநாதன், திரு.S. பத்மநாதன் குடும்பத்தினர். அவர்களில் திரு. S. பரமநாதன் அவர்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் (தாய்ச்சங்கம்) தலைவராக நிர்வாகத்திற்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி, கல்லூரிரியின் படிமுறையான வளர்ச்சிக்கும், பூரணமான பங்களிப்பை வழங்கியதோடு இன்றும் இச் சங்கத்தின் போசகராக இருந்து தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார். இதற்கு எல்லாம் அவரை வழிப்படுத்தியவரும், உந்து சக்தியாக விளங்கியவரும் அமரர் திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன் அவர்களையே சாரும். அமரர் அவர்கள் தனது கணவர் சமூகசேவையிலும், கல்லூரியின் வளர்ச்சிச்செயற்பாட்டிலும், ஈடுபட பக்க பலமாக இருந்தவர் என்பதோடு அவருடைய குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக இருந்தாலும்

"பிறப்பவர்கள் இறப்பவர்கள்"

என்ற நியதிக்கு அமைய அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்கந்தவரோதயவில் வீற்றிருக்கும் ஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/ ஸ்கந்தவரரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

**மு. செல்வஸ்தான்**
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பிறை கண்ட ஆசிரிய திலகம்

அமரர் திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன் அவர்களின் மறைவு அவரின் குடும்பம், உறவினர்கள், நண்பர்கள் அனைவரிற்கும் பெரிய இழப்பாகவுள்ளது.

அன்னார் தனது பாடசாலைக் கல்விக் காலத்தில் சிறந்த மாணவியாக திகழ்ந்தவர். இவர் உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவாகி அன்றைய கலாசார நிலை காரணமாக விஞ்ஞானப் பட்டதாரியாகினார். இதன் பின்னர் தனது பட்டப்பின் படிப்புகளை வெளிநாடுகளில் சென்று நிறைவு செய்தவர். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் தமிழ்மொழி மூலக் கணிதபாட செயலாளராக இருந்தும், ஆசிரியராக இருந்தும் தனது சேவைகளை இலங்கை வாழ் தமிழ் மாணவர்களுக்கு வழங்கிய கணித மேதை. சிறந்த இல்லத்தரசியான இவர், தனது குடும்பத்தைச் சிறப்புற வழி நடத்தினார். கணவர் பரமநாதனின் தொழில் வாழ்வுக்கும், துடிப்பான சமூக சேவைச் செயற்பாடுகளுக்கும் பக்கபலமாக இருந்துள்ளார். தனது ஒரே மகன் தயாபரனின் கல்வியில் பெரிதும் அக்கறை காட்டியவர். பெற்றோரின் விருப்பத்திற்கும், எதிர்பார்ப் பிற்கும் ஏற்ப மகன் தயாபரன் கலாநிதிப்பட்டம் பெற்று, இன்று பல்கலைக்கழக கல்வியாளராக, விஞ்ஞான ஆய்வாளராக அமெரிக்காவில் பணிபுரிகின்றார். அவர் தனது பட்டமளிப்பு விழாவிற்கு தன் பெற்றோரை அமெரிக்காவுக்கும் அழைத்து பட்டமளிப்பு விழாவுடன், பல்வேறு நிறுவனங்களுக்கும் சென்று பார்க்க வழி செய்தார்.

யுத்தத்தினால் சொந்த வீட்டை இழந்த அன்னார், பல இடங்களிலும் இடம் பெயர்ந்து வாழ்ந்த போது ஒவ்வொரு இடத்திலும் அயலவர்களின் நன் மதிப்புடன் வாழ்ந்து வந்துள்ளார்.

அன்னாரின் இழப்பு அனைவரையும் மனவேதனையில் ஆழ்த்தினாலும் இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. மரணத்திலிருந்து எவரும் தப்ப முடியாது என்ற உண்மையை ஏற்று மனதைத் தேற்றிக் கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திப்போமாக.

**பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை**

முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்கந்தவரோதயா கல்லூரி பரிசளிப்பு விழாவில்
பரிசளிக்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# In Memory of Mrs. Sinnathankam Paramanathan

The Sudden demise of Mrs. Sinnathankam Paramanathan is a great loss to his family, relatives, friends and Educational world. She was born in the famous betel grown area and palmyra grown cultural land.

She was an excellent student in mathematics and after graduation entered the educational administrative service as Secretary (Mathematics) and has attended to the Educational Publicational Department.

Her husband Mr.S.Paramanathan is a former Local Government Administrator and UNDP project coordinator, she was an encouraging factor for all his social activities. She was disciplinarian and always punctual. She was a mental tutor to his only loving son Thayaparan. He has obtained his PhD and he is an assistant professor in one of the universities in the USA.

Mrs. Sinnathankam has also undergone calamities in her life during the country' s conflict period and lost all of her valuable possessions including her valuable library of books. She has withstood all these strains and led a simply godly life. In short she was a devoted wife and a great mother.

The Human Right Senior Citizens Welfare association at its monthly Meeting, resolved to record its deepest sympathies, in memory of late Mrs. Sinnathankam Paramanathan wife of Mr. S. Paramanathan Vice - President of our association.

May she rest in peace with the God Almighty.

**Prof. V. K. Ganeshalingam**
Secretary, The Human Right Senior Citizens Welfare Association



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Reg.No T/S/R/2013/00146 of 15.10.2013 -Reg; under Voluntary Social Services Organization (Act No. 31 of 1980 as amended by Act No. 8 of 1998)

JOIN THE SOCIETY, ENJOY A HEALTHY AGEING LIFE & DEPART HAPPILY! © Healthy Ageing

**The Geriatrics Society of Sri Lanka**

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகம் - YSs% ,xld jevsyssssgs iqNidOl ix.uh

**Northern Province Centre - வடமாகாண அமையம்**

Head Office: No.1, Bambalapitiya Flats, Community Centre Hall, Colombo -04. Tel: 2595983 (office).

PRESIDENT
**Mr.K.Kaneshamoorthy**
Suthumalai Centre, Suthumalai, Manipay
Tph.. 077 6068656, 021 2255644

VICE-PRESIDENTS
**Mr.S.Paramanathan**
Tph.. 077 8608048, 021 2230909,
No.42, Palaly Road, Urumpirai.

JOINT SECRETARIES
**Mr.V.Srisakthivel**
Tph.. 077 8435771, 021 222 2797
No.45, Ambalavanar Veethy, Athiyady, Jaffna

**Mr.K.Kamalasekaram**
kamalamnet@gmail.com,
kamalasekaram@gmail.com
Tph.. 077 6636596, 021 2213150
No.36, Old Road, ArukalMadam, Annaiccodai, Jaffna

TREASURER
**Prof.V.K.Ganesalingam.**
Tph.. 077 0423855,
**BIOTEC, No.131/2, Palaly Road, Jaffna**

ASST. TREASURER
**Mr. S.Selvaranjan**
C/O.St.John Ambulance,
N0.161, 1st Cross Street, Jaffna.
Station Road,. Kokkuvil..
Tph.. 075 7610010, 021 2223166

COMMITTEE MEMBERS
**Mr. K.Atchuthampillai**- 077 3464336
**Mr. S.Nadarajah**- 077 3553002
**Mr. S.Pathmanathan**- 0776589642
**Mr. E.Pathmanesan**- 077 5811172
**Mr. V.Sriskantharajah**- 077 5803991
**Mr.S.Sripathy**- 071 8224457
**Mr.T.Raveenthiran**- 077 6365987
**Mr.A.Rahavan**- 077 7384800
**Mr.R.Satkunarajah** 077 5842463

HONY. CONSULTANTS
**Prof. K. Balasubramaniyam**
B.Sc. (SI), Ph.D (Indiana), D.Sc. (Jaffna),
Former Dean Faculty of Medicine.

**Dr. M.A.M. Muneer**
Consultant (Gold Medalist)
D.H.M.S. (Pak), R.H.M.P. (Pak.SL)

## A Fitting Tribute
## to Mrs. Sinnathangam Paramanathan,
## Wife/Mother and a Forward Social Worker

*A beacon that shone brightly and guided the "Paramanathan Home" and all around it and the society at large, alas, is no more. The extinguished flame has taken safe refuge in the Merciful Hands of His Almighty. Safely positioned in the Caring Hands of the Maker, she is there, continuing to guide those whom she cherished near and dear to her, as a beacon Light from above.*

*No mention of Mrs.Paramanathan is complete without her beloved Husband Mr.Paramanathan's exemplary yeoman services rendered by him to the society to which he belonged and humanity at large, for, she was the dynamo within him energizing all what he did. A devoted wife and a caring Mother for her children, Mrs.Paramanathan was towering strength to all around her exuding confidence and exuberance. Her commitment to support the Social worker husband, was the Energy resource that kept Mr.Paramanathan, relentlessly take forward his multifarious community projects successfully. Mrs.Paramanathan's pleasant mannered interactions with the under-privileged, deservedly earned her the reputation as a lady 'empathy personified'.*

*Discharging her duties and responsibilities immaculately in the public positions she held, she excelled in her house-keeping as well, and made 'Paramanathans' household, a 'Home Sweet Home' for one and all. Mr.Paramanathan's political, social and religious activities always had the full co-operation and active participation of this meticulous life partner who undoubtedly outshone peers. Deftly handling complicated issues, Mrs.Paramanathan has really gone the extra mile in contributing to Mr.Paramanathan's role as Vice President of our organization.*

*We fervently pray that His Almighty provide solace to the bereaved family, Friends and Associates.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இந்துவின் இறுதிப்பயணம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இந்துவின் இறுதிப்பயணம்...

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யப்படும் கிரியை ஆதலால், இது அபரக்கிரியை என்று பெயர் பெறுகிறது. அபரக்கிரியை உத்கிராந்திக் கிரியை முதல் வருட சிரார்த்தம் வரை பல கிரியைகளை உடையனவாம். இங்கே கூறப்படும் கிரியைகள் யாவும் சமய தீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே செய்யப்படு வதாகும். சமயதீட்சை இல்லாதவர்கட்கு மந்திரமில்லாது, திருமுறையுடன் கிரியை செய்யவேண்டும். ஆதலால் எல்லோரும் சமயதீட்சை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**உத்கிராந்திக் கிரியை**

ஒருவர் உயிர் பிரியும் நிலை அடையும்போது (மரணவேளை) சுற்றத்தவரிடத்து பொருள் இடத்தும் உள்ள பற்றை நீக்கி, விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்துத் தேவாரம், திருவாசகங்களைச் சிவனடியவரைக் கொண்டு பாடக் கேட்க வேண்டும். இவ்வேளை (பசு) கோதானம் செய்வது சிறந்ததாகும்.

அவருடைய மகன் அல்லது சுற்றத்தவருள்ளே சமய தீட்சை உடையவன் மனம் கலங்காது புண்ணிய தலத்து விபூதி, பூசி அவர் உடம்பில் வில்வத்தடி மண்பூசி, அவர் வாயில் கங்கா தீர்த்தம் விட்டு, அவர் தலையைத் தம்மடி மீது வைத்து, அவர் செவியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்து, செவியைக் கையினால் மூட வேண்டும். உயிர் நீங்கிய பின், உடலைச் சுத்தி செய்து அலங்காரம் செய்து, நிலத்தைத் தூய்மைப்படுத்தித் தர்ப்பை பரப்பி தெற்கே தலை இருக்கத்தக்கவாறு வளர்த்தவும். காற்பெருவிரல் இரண்டையும் துணியாற் கட்டி விடவும். இதேபோல் கைப்பெருவிரல் இரண்டையும் சேர்த்துக் கட்டவும். வாயைத் தலையுடன் சேர்த்துக் கட்டிவிடவும். உப்பைப் பொட்டலமாகக் கட்டிப் பிரேதத்தின் மீது வைத்தலும், பிரேதத்திற்குக் கீழே நீர் நிரம்பிய பாத்திரம் வைத்தலும் உண்டு. உடலை வெள்ளைத்துணியால் முழுமையாய் மூடிவிடவும். தலைப் பாகத்திற் குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். மனைவி, மக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகம்செய்து, பின் பஞ்சகவ்வியம், கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா இடது கைமேல் வலது கையை வைத்துப் பிடிக்க, வேறு ஒருவர் உதவியுடன் கர்த்தாவின் புறங் கையினால் அபிஷேகம் செய்ய வேண்டும். பின் அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியம் தெளித்து, பிரேதத்தை அலங்காரம் செய்து மண்டபத்திற்கு கொண்டு வரவேண்டும். தலை தெற்கில் இருக்கக்கூடியதாகக் குருக்களுக்கு இடப்புறமாக வைத்து திருநீற்றை நீரிற் குழைத்து, சத்தியோசாதம், முதலாக முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, சிரசு, புயம் இரண்டுகள் முழங்கை இரண்டுகள், மணிக்கட்டுகள் இரண்டு விலாகள், முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசி, பன்னீராற் கைகழுவி, நீரைப் பிரேதத்தின் சிரசில் தெளிக்கவும். இவ்வேளையில் திருநீற்றுப்பதிகம் ஓதல் வேண்டும். சந்தனம் குங்குமத் திலகமிட்டு பூமாலை சாத்தவும்.

**சுண்ணம் இடித்தல்**

பேரிதாடனம் செய்து, அதன்பின் உரலிற் பூமி தேவியையும், உலக்கையில் மேரு மலையையும் பூசித்து (வையகமெல்லாம் உரலாக மாமேருவென்றும் உலக்கை நாட்டி) அறுகு, மஞ்சள்மா என்பவற்றை உரலில் இட்டு எண்பத்தொரு பது மந்திரம் சொல்லி, மூன்றுதரம் இடித்துப் பின் திருவாசகத்தில் உள்ள திருப்பொற் சுண்ணப்பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்ச புராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப்பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்ப நீர் விட்டுக் குழைத்து, கர்த்தா நெற்றியில் (பொட்டிட்டு) அணிந்து, பிரேதத்தின் இரண்டு கண்களிலும் சாத்தி, மிகுதியை உடல் முழுவதிலும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும்போது இறந்தவரின் பேரப்பிள்ளைகள் முதலானோர், பிரேதத்தைச் சூழ நின்று தீபங்கள் பிடிப்பர்.

சுண்ணம் இடித்தல் பிரேத ஸ்நானத்திற்கு முன் நிகழ்வது தான் முறையானது. நம்மவர்களின் ஆசாரக் குறைவு கருதி, பிரேத சுத்தியின் பொருட்டு சிவகும்ப ஸ்நானம் முடித்து, அதன்பின்பே சுண்ணப்பொடி தெளிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித் தானம் கொடுத்தலும், பிரேத யாத்திரையின் பொருட்டு, யாத்திரா தானமும் நிறைவு செய்து, குருக்களுக்குத் தட்சணை கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள். சுற்றத்தவர் (பெண்கள்) இடப்புறமாகச் சுற்றி வந்து வாய்க்கரிசி இடுவர். (வாய்க்கரிசி - பச்சை அரிசியும் தேங்காய்த் துருவலும் சேர்த்தது). மனைவி, மக்கள் பிரேதத்தின் பூவடிகளிற் பூப்போட்டு வணங்குவர். கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால், நிறைநாளியை (தீபம், நெல்நிறைந்த 'கொத்து எனும் அளவுக்கலம்' சேர்) பிரேதத்தின் கையால் தொடச்செய்து, வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றைச் சேலை முந்தானையில் முடிந்துவிடவும். பிரேதத்தின் கீழே உள்ள துணியையும் மேலே உள்ள துணியையும், சேர்த்து பிரேதத்தை மூடி, தலைப்பகுதியில் ஒரு முடிச்சிடவும். கீழே உள்ள ஆர்க்கைத் துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.

யாகத்திற்குரிய மரங்களிற் பச்சை மரத்திற் கட்டப்பட்ட பாடையிற் பச்சைத் தென்னை ஓலைப் பன்னாங்கிற் பிரேதத்தை வைக்கவும். பாடை கமுக மரத்தாற் கட்டப்படும். பெண்கள் பாடையை இடமாக மூன்று முறை சுற்றி வந்தபின், பிரேதம் மயானத்துக்குக் கொண்டு செல்லப்படும். கால்கள் முன்பாக முதல்வரப் பிரேதத்தை எடுத்துச் செல்ல வேண்டும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல, புகையுடன் கூடிய நெருப்புக் கலத்தை மூன்று காலுடைய உறியில் வைத்து, குனிந்த தலையுடன் சுற்றத்தவர் பின்னேவர, வாத்தியம், சங்கு ஒலிக்கத் திருமுறைப் பாடல்கள் பாடியவாறு, அஸ்திர மந்திரத்துடன், பொரி தூவியவாறு சுடலையை அடைந்து, தலை தெற்கே இருக்குமாறு பாடையை இறக்குக.

வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி, அந்த சிதாஸ்தானத்தில் தலை தெற்கே இருக்கப் பிரேதத்தை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும். சுமங்கலி இறந்தால் அவரின் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை எடுத்துவைத்து, தேங்காயை உடைத்து தாலியை அவிழ்த்து (கழற்றி) எடுக்கவும். கர்த்தா சிவகும்பத்தை இடது தோளில் வைத்து இடப்புறமாகச் சுற்றி வந்து, தலைப் பாகத்தில் வைத்து, அதன் கழுத்துவரை உடைத்தெடுத்து, கும்பநீரில் அரிசியை நனைத்துக் காசுடன் தற்புருஷ மந்திரத்தால் வாய்க்கரிசி இடவும். குடத்தையும் கொள்ளியையும் கொண்டு இடமாக மும்முறை சுற்றி வரவும். ஒவ்வொரு முறையும் குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து ஒழுகும் நீரை சிதையில் தெளிக்கவும். தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று கொள்ளியை வைத்து குடத்தை தனக்கு முன்பக்கத்திற்குப் போட்டு உடைக்கவும். பின் கால்மாட்டிற் சென்று பவித்திரம், உபவீதம் என்பவற்றைக் கழற்றிச் சிதையிற் போட்டு, நமஸ்காரம்செய்து திரும்பிப் பாராமல் நீர்க்கரையை அடைந்து நீராடி, நிவாபாஞ்சலி தருப்பணம் செய்து கொள்ளவும்.

நிவாபாஞ்சலி தருப்பணம், பிதிரர் பொருட்டு இரு கைகளாலும் செய்யப்படும் சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியா பனத்திலும் செய்யலாம். சுடலையில் இருந்து வீட்டுக்கு வரும்போது, ஒரு சிறிய இரும்புப் பொருள் கொண்டுவர வேண்டும். ஏனெனிற் பேய், பிசாசுகள் தொடாரமலிருக்க இரும்புக் கத்தியைக் கொண்டு வருவார். சுற்றத்தவரோடு வீட்டு வாயிலுக்கு வந்ததும் வேப்பிலை கடித்து உமிழ்ந்தபின் ஒரு கல்லில் ஏறி உலக்கையைக் கடந்து கைகால் கழுவி, பின் நீராடி, வீட்டைச் சுத்தம் செய்யவும். தூய்மையாய் தயாரித்த சோறு கறி முதலியவற்றை இறந்தவருக்குப் படைத்து, தீபமேற்றித் திருமுறை பாடிய பின்னர், உரிமைக்காரருடன் உணவை உண்ணவும், ஆசௌசிகள் (ஞாதிகள்) அல்லாதோர் அங்கு உணவு உண்டால், அவ் ஆசௌசம் முடியும் வரையும் ஆசௌசம் காக்க வேண்டும். அந்தியேட்டி வரை தினமும் இரவில் தீபம் ஏற்றி, நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் வைத்துத் திருமுறைப் பாராயணம் செய்தல் வேண்டும். தாம் உண்பதற்குமுன் பிதுர்பாகம் திருவிளக்கடியிற் படைத்துத் தியானித்து ஆன்மப் பிரீதிக்கு வேண்டியபின் உணவருந்தவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஸ்தி சஞ்சயனம் (காடாத்து)**

தகனம் செய்த அன்று அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாட்களிலும் எலும்புகளை எடுக்கலாம். அங்கு அக்கினி தணிந்திருந்தால் சிவாக்கினி மூட்டிப் பிராயச்சித்தம் ஓமம், தத்துவ ஓமம் செய்யவும், அக்கினி தணியும் வரை நீரை ஊற்றவும். அபிஷேகப் பொருட்களால் காலில் இருந்து உச்சிவரை அபிஷேகம் செய்யவும். பின் சத்தியோசாதம் முதலாம் பஞ்சப்பிரம மந்திரங்களைக் கூறி, முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி, சந்தனம், பூ முதலியவற்றைச் சாத்தி, தூபதீபம் காட்டியபின், முழந்தாள் முதலிய ஐந்து இடங்களிலும் சத்தியோசாதம் முதலான மந்திரம் கூறி, எலும்புகளை சேகரித்து எடுத்து, முக்காலியில் உள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு, பாத்திரத்தின் வாயைப் புதிய துணியால் மூடிக் கட்டவும். மிகுதியாயுள்ள எலும்புச் சாம்பலை அள்ளி, அவ்விடத்தைச் சுத்திசெய்து, பண்படுத்தி, நவதானியம் விதைத்து, பால் தெளித்து, குளிரப்பண்ணி, வெற்றிலை, பாக்கு, பழம், நெற்பொரி, ரொட்டி, வடை (கோது நீக்கப்படாத உழுந்தில் செய்தது) முதலியவற்றைப் பூத, பிரேத பைசாசங்களின் பொருட்டு நிவேதித்து, திருமுறை ஓதி, வழிபாடு செய்த பின்னர், எலும்பையும் சாம்பலையும், சமுத்திரம் முதலிய நீர் நிலைகளில் விடவும். அஸ்தியை அந்தியேட்டிக்கோ, அல்லது காசிக்கோ கொண்டுசெல்லவென்று எடுத்துவைப்பது முறையல்ல. வீட்டிற்கு வரும்போது வாசலில் வேப்பிலை மென்று உலக்கையைக் கடந்துவருதல் வேண்டும்.

**அஸ்தி சஞ்சயனத்தின்போது கொண்டு செல்பவை**

அரிசி மாவைப் பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டு போகவேண்டும். அத்தோடு பால், தயிர், மண்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவர்த்தி, பழவகை, இளநீர், பாக்கு, வெற்றிலை , பூஜைக்குரிய பொருட்கள்.

**தனிஷ்டா பஞ்சமி சாந்தி**

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் இறந்தால் தோஷமுண்டு. இதற்குச் சாந்தி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற் பூர்ண கும்பம், தண்ணீர், பசு, தீபம் இவற்றை மூன்று நாள், இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது பாதுகாக்க வேண்டும். நீற்றுப் பூசணிக்காய் கட்டுதல், வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் முதலியன நடைமுறையில் உள்ள வழக்கம். பிரேதத்தைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும்போது கமுகம் பிள்ளை ஒன்றும் பிரேதத்தோடு கொண்டு செல்லும் வழக்கமும் உண்டு. சனிக்கிழமை பிரேத தகனம் செய்ய நேரிட்டாற் பிரேதத்துடன் கமுகம்பிள்ளை எடுத்துச் செல்வர்.

சுப நட்சத்திர சுப வாரத்தில், பஞ்சமி சாந்தி செய்யப்படும். அல்லது அந்தியேட்டி அன்று இரவு சாந்தி செய்யலாம். ஆசாரியர் நித்திய கருமம் முடிந்தபின், புண்ணியாக வாசனம் பஞ்சகவ்வியம் ஸ்தானசுத்தி செய்வார். பின் விக்கினேஸ்வரரைப் பூசித்து யமன் பிரதிமையைத் தானம் செய்க.

எருமை வாகனத்துடன் யமனை வெள்ளி அல்லது செப்புத் தகட்டில் வரைந்து சந்தனம், புஷ்பங்கள் சாத்தி, சோடச பூஜை செய்ய வேண்டும். பசு, த்ருணம், சலம் இவைகளை வைத்து, இறந்த நட்சத்திர சாந்தி தானங்களைச் செய்க. அவிட்டத்திற்கு வெண்கலப் பாத்திரமும், சதயத்திற்கு எள்ளும், பூரட்டாதிக்கு வஸ்திரமும் (ஆடை), உத்தரட்டாதிக்கு வெல்லமும், ரேவதிக்கு வெள்ளியும் தானம் செய்க.

வீட்டின் நடுவில் இரண்டு படி நெல் பரவி, ஒருபடி அரிசியும் அரைப்படி எள்ளும் காற்படி உழுந்தும் பரவி அதன் மேல் கும்பம் வைத்து, அதில் லக்ஷ்மியை ஆவாகனஞ் செய்து, லக்ஷ்மி பிரதிமையை வைத்துப் பூசித்து, கிழக்கு முதல் ஈசானம் வரை, திக்கு பாலகர்களைக் கலசங்களிற் பூசித்து, நைவேத்திய தூபதீபம் கொடுத்து, அவரவர் மந்திரங்களை ஆயிரம் அல்லது ஐந்நூறாவது செபித்து, கும்பத்திற்கு மேற்கே அக்கினி உண்டாக்கி, அதில் லக்ஷ்மிக்கும் திக்குப் பாலகர்களுக்கும் ஆகுதி செய்க. நவக்கிரக ஓமம் செய்து, கர்த்தாவை கிழக்கு முகமாக இருத்தி, கும்ப நீரால் அபிஷேகம் செய்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கவும். பின் தானம் கொடுத்து, ஆசாரியரைப் பூஜை செய்யவும். இது அபரக்கிரியா விதி வியாக்கியானத்திற் கூறப்பட்டது. இக்காலத்தில் நடைமுறையில் உள்ள சாந்தி மேல்வருமாறு:

அந்தியேட்டி அன்று, இரவு வீட்டு முற்றத்திற் பந்தலிட்டு வெள்ளை கட்டி, மாவிலை தோரணத்தால் அலங்கரித்து, நிலத்தை மெழுகிச் சாந்தியை ஆரம்பிப்பர். விக்கினேஸ்வரர் பூஜை, புண்ணியாகவாசனம், பஞ்சகவ்விய பூஜை முடித்து, முறத்தில் (சுளகு) அரிசிமா, மஞ்சள் மா, கரிமா, இலை (பச்சை)மா, செங்கல் (சிவப்பு)மா இவற்றால், சிதாஸ்தான பதம் வரைந்து, இதிற் பஞ்ச தத்துவங்களையும் பூசித்து, அரிசிமா அல்லது தர்ப்பையினாற் செய்த புத்தளிகையை (உருவம்) வைத்து, இறந்த நட்சத்திரத்திற் குரிய மந்திரங்களால் பூசித்து, அக்கினி உண்டாக்கி, ஆகுதி, பலி, பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்து, முறத்துடன் புத்தளிகையைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனம், செய்து சாம்பலை நீர்நிலைகளில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி, அநுட்டானம் முடித்த பின் சிவன், வர்த்தனி, லக்ஷ்மி, நவக்கிரக தேவர்களையும் பூசித்து, கர்த்தாவிற்கு, சிவன் வர்த்தனி கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் தானம் கொடுக்கவும்.

வெண்கலமாயின், ஐந்து பலமும், எள் எனின் இரண்டு படியும், வஸ்திரம் எனின் இரண்டும், வெல்லமாயின் பத்து பலமும், வெள்ளி எனின் ஒரு பலமும், தானம் செய்யவும். அவிட்டத்திற்கு ஆறு மாதம், சதயத்திற்கு மூன்று மாதம், பூரட்டாதிக்கு ஒன்றரை மாதம், உத்தரட்டாதிக்கு ஒரு மாதம், ரேவதிக்குப் பதினைந்து நாட்கள் தோஷமாகும்.

**எட்டுச் செலவு**

எட்டுச் செலவு என்ற கிரியை பத்ததி, ஆகமங்கள் ஆகியவற்றிற் குறிப்பிடப்படவில்லை. தேச வழமையில் உள்ள கிரியையாகும். இறந்த நாளில் இருந்து ஏழாம் நாளிற் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை கருதி ஐந்தாம் நாளிற் செய்வதும் உண்டு. இறந்தவர் விரும்பி உண்ட உணவு வகை யாவும் படைக்கும் பேருணவுப் படையல் படைத்து, தீபம் காட்டி, அவ்வளவு வகைகளிலும் சிறு பகுதியை எடுத்து, தீப்பந்தம், இளநீருடன் சந்தியில் வைக்கும் வழமை உண்டு. இது பகல் வேளையில் நடைபெறும். சில இடங்களில் இரவு வேளையில் நடத்துவர். இதில் மாமிசஉணவு, மதுபானம் என்பன படைத்தல் தவறு . இறந்தவருடைய ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும்போது, கடமை செய்தவரும், வீடும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதால் 31 நாட்களும் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். எட்டுச் செலவுவரை வீட்டில் எண்ணெயில் பொரித்த உணவு வகைகள் தயாரிப்ப தில்லை.

**அந்தியேஷ்டி**

அந்தியேஷ்டி என்பது இறுதியாகச் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேஷ்டியினால் சமய ஆசாரம், அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும்.

அந்தியேஷ்டி - சமய அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டி என மூன்று வகைப்படும். இது சமய, விசேட, நிர்வாண தீட்சை உடையவர்களுக்கு, அவர்கள் பெற்ற தீட்சை வகையிற் செய்யப்படும். விசேட, நிர்வாண அந்தியேஷ்டியும், சைவ ஆசாரம் உடைய புலால் உண்ணாத சமய தீட்சை உடைய சைவர்களுக்கும் செய்யப்படும். சமய அந்தியேஷ்டியும் பிரேதத்திற் சுடலையிற் செய்யப்படும். ஏனையோருக்குச் செய்யப்படும் சமய அந்தியேஷ்டி, ஆசௌச முடிவில் 31 ஆம் நாளிற் செய்யப்படும். இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர். மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தால், அந்தியேஷ்டி (தர்ப்பை சுடல்) நாள் பார்த்துத்தான் செய்யவேண்டும். நந்தை, பத்ரை, திரயோதசி தவிர்ந்த திதிகளுள், செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும், திரிபாத நட்சத்திரம் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம். (காலவிதானம்) நந்தை - பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி; பத்ரை - துதியை, ஸ்ப்தமி, துவாதசி, திரிபாத நட்சத்திரம், கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி) 26 ஆம் நாளுக்கு மேல் 31 ஆம் நாள் வரையில் அந்தியேஷ்டி செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடலை, ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரக்கரை, வீடு (கிணற்றடி) ஆகிய இடங்கள் அந்தியேஷ்டி செய்வதற்கு உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்த பட்சம் ஐந்து முழ நீள அகலங் கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம்மண்டபத்திற்கு பதினாறு அல்லது பன்னிரண்டு அல்லது நாலு கால்கள் அமைய வேண்டும். மேலே வெள்ளை கட்டி, விதானம், தோரணம், பூமாலைகளால் அலங்கரித்து நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து, தெற்கிற் பிரதான வாயில் அமைத்து சாணத்தினால் நிலத்தை மெழுகி, மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும்.

நடுப்பதத்தில் ஓம குண்டமும், வடமேற்கில் சிவகும்பமும், வடகிழக்கில் வர்த்தனி (பாசுபதாஸ்திர) கும்பமும், தென்மேற்கிற் பஞ்சகவ்விய மேடையும், தென்கிழக்கிற் சிதாவஸ்து தானம் (பிரேத தகன இடம்) ஆகியவற்றையும் சுற்று வேதிவையில் (மண்டபத்தின் சுற்றுப்புறத்தில் ) தசாயுத கும்பங்களையும் அமைத்துக் கொள்ளவும்.

சிதாவஸ்து தானத்தை வடக்குத் தெற்காக, நீண்ட சதுரமாக்கி, இருபத்தைந்து பதமாகப் பிரித்து, நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள் மாவும், தென்மேற்கில் நாலு பதத்தில் வெள்ளை மாவும், தென்கிழக்கில் நாலு பதத்தில் சிவப்பு மாவும், வட கிழக்கில் நாலு பக்கத்திற் கறுப்பு மாவும், வட மேற்கில் நாலு பதத்தில் பச்சை மாவும், வடக்கில் உள்ள ஒரு பதத்திற் சிவப்புமாவும், மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வெள்ளைமாவும், தெற்கில் உள்ள ஒரு பதத்திற் கறுப்பு மாவும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் மஞ்சள் மாவும் இட்டுக் கொள்ளவும்.

புத்தளிகை (பிரேதம் போலச் செய்யும் தருப்பை) முப்பத்தாறு தர்ப்பைகளாற் முறுக்கி, இடப்பக்கமாக முடிந்து, ஐவைந்து தர்ப்பைகளால் கைகளும், பதின்மூன்று தர்ப்பைகளாகப் பிரித்து கால்களையும் ஆக்க வேண்டும்.

ஆசாரியார் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து, தெற்கு வாயிலால் மண்டபத்துட் புகுந்து, சிவகும்ப வேதிகைக்குத் தெற்கே வடக்கு நோக்கி இருந்து, கர்த்தாவிற்குத் திருநூறு கொடுத்து, சங்கற்பம் செய்து கொண்டு, சளீகரணம், பூத சுத்தி, மந்திர சுத்தி, அந்தர்யாகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகஸ்தம் செய்து, சிவோகம் பாவனை முடித்து, ஞானகட்க தாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகவ்விய பூசை முடித்து, யாக மண்டபத்தையும், கர்த்தாவையும் புத்தளிகையையும் பஞ்சகவ்வியத்தால் (புரோட்சித்தல்) தெளித்தல் வேண்டும். சூர்ணோற்சவம் செய்து, சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிடேகம் செய்யவேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்து, நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி, மிகுதியை ஈசானத்தில் பாசுபதாஸ்திர வர்த்தளி ஆசனத்தில் இடவும்.

**சிதாவஸ்து பூஜை**

நடுப்பதம் ஐந்திலும் பிருதுவி தத்துவத்தையும், பிரம்மாவையும் தென்மேற்கு மூலையில்

நான்கு பதத்திலும் அப்பு தத்துவத்தையும், விஷ்ணுவையும் தென்கிழக்கு மூலையில்

நான்கு பதத்திலும் தேயு தத்துவத்தையும், உருத்திரனையும் வடமேற்கு மூலையில்

நான்கு பதத்திலும் வாயு தத்துவத்தையும், மகேஸ்வரனையும், வடகிழக்கு மூலையில்

ஆகாச தத்துவத்தையும் சதாசிவனையும், வடக்கில் உள்ள ஒரு பதத்தில், குபேரனையும் மேற்கில் உள்ள ஒரு பதத்தில், வருணனையும், தெற்கில் உள்ள ஒரு பதத்தில், யமனையும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில், இந்திரனையும் பூசித்து, பழம், தாம்பூலம் நிவேதித்து, நீராஞ்சனம் செய்தல் வேண்டும்.

வர்த்தனி பூஜை செய்து, பாசுபதாஸ்திர பூஜை செய்து, ஞானவாளை ஒப்புக்கொடுத்து, யாகத்தைக் காத்து ரட்சிக்கும்படி வேண்டியபின், தசாயுத பூஜை செய்யவேண்டும். வட கிழக்குத் திசை முதல் கிழக்குத் திசை வரையுள்ள எட்டுக் கும்பத்திலும் சூலம், கதை, துவசம், பாசம், கட்கம், தண்டு, சக்தி, வச்சிரம் ஆகியவற்றையும், வடகிழக்கில், தெற்கில் உள்ள கும்பத்திற் பத்மத்தையும், தென்மேற்கில் வடக்கே உள்ள கும்பத்திற் சக்கரத்தையும் பூசித்து, தசாயுத தேவர்களிடம் யாகம் முடியும் வரை பாதுகாக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சிவாஞ்சையைத் தெரிவித்தல் வேண்டும். பின்னர் சிவகும்ப பூஜை, சிவாக்கினி காரியம், பிராயச்சித்த செபம், நாடீசந்தானம், மிருதக தீட்சை செய்து சிதாவாஸ்து தானத்தில் பூசித்த ஐவகை மாவையும் இட்டு, அதன்மேற் புத்தளிகையை வைத்து வாய்க்கரிசியிட்டு, கொள்ளி வைத்துக் குடம் உடைத்து, தகனம் செய்த பின்னர், காடாற்றி, புத்தளிகைச் சாம்பலை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்.

**நக்னதானம்**

இறந்தவருக்கு ஏற்படக்கூடிய பசி, தாகம்,, குளிர்(ஆடை இல்லாத குறை) போன்றவற்றை நீக்கும் பொருட்டுச் செய்யப்படும் தானம் நக்னதானம் ஆகும். குடும்பத்தவராய் உள்ள ஆசாரியாருக்கு, அரிசி, வஸ்திரம் முதலியவற்றைத் தானமாகக் கொடுக்கவேண்டும். உயர்தீட்சை உடையோருக்கு, பிரேத தகனம் செய்த உடன் இத்தானம் கொடுக்கப்படும்.

**துர்மரணப் பிராயச்சித்தம்**

இயற்கையாக உயிர்பிரியாது தன் உயிரைத் தானே மாய்த்துக்கொள்ளல் அல்லது வேறு ஏதுக்களால் உயிர்பிரிதல் துர்மரணம் எனப்படும். நீரில், நெருப்பிற்பாய்தலால், நஞ்சு உண்டலால், பாம்பு கடித்தலால், ஆயுதங்களால், விலங்குகளால் ஏற்படும் இறப்பு துர்மரணமாகும்.

இது புத்திபூர்வம், அபுத்திபூர்வம் என இருவகைப்படும். புத்திபூர்வம் தானேதான் உயிரைப் போக்கிக் கொள்வது. அபுத்திபூர்வம் எதிர்பாராத விதமாக உயிர் பிரிதல். அபுத்திபூர்வ துர்மரணத்திற் சாதாரண மரணம் போலவே கிரியையும் ஆசௌசமும் கொள்ளப்படும். இதில் தேகம் பின்னப்பட்டிருந் தால் ஆசௌச முடிவில், பிரதித்தேகத்தில் (புத்தளிகையில்) புனர்தகனம் அந்தியேட்டி செய்யவேண்டும். புத்திபூர்வ துர்மரணத்தில் சாதாரண அக்கினியில் தகனம் செய்து ஒரு வருடம் அல்லது ஆறு மாதம் அல்லது மூன்று மாத முடிவில் ,இறந்த திதியில் தர்ப்பையாற் செய்யப்பட்ட பிரதித் தேகத்தில் அந்தியேட்டி செய்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்மரணமடைந்தோர் பைசாச ரூபத்தில் அலைவர். ஆதலால் பைசாச புவனத்திற்கு அதிபதியாகிய வைரவருக்குச் சாந்தி செய்த பின்பே அந்தியேட்டி செய்யப்படும்.

**பாஷாணத்தாபனம்**

இறந்தவருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் பாஷாண பூஜை எனப்படும். (பாஷாணம் - கல்) இதிற் செய்யப்படும் கிரியைகள் ஆன்மாவின் பசி, தாகம், நீங்கும் பொருட்டும், பிரேத வடிவம் நீங்கும் பொருட்டும், ஆன்மாவின் உணவு விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டுமேயாகும்.

இக்கிரியை வீட்டில் மண்டபம் அமைத்து விரிவாகச் செய்யலாம். பிரேதத்தில் அந்தியேட்டி செய்பவர்கள், வீட்டிலே பாஷாணத் தாபனம் செய்து, விரிவாகப் பூஜை நிகழ்த்துவர். இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் நிறைவெய்தியதும் அந்தியேட்டி மடத்திலேயே இக்கிரியை நிகழ்கிறது.

மண்டபத்தில் வேதிகை அமைத்து, வேதிகையில் வடக்குமுகமாக ஒரு கும்பம் வைத்து, அதில் இறந்தவர் தீட்சைக்கு ஏற்றதுபோல, உருத்திரர், ஈசுவரர், சதாசிவர் என்பவரில் ஏற்றவரைப் பூசித்தல் வேண்டும். ஒரு பாத்திரத்திலே கல்லினைக் கூர்ச்சங் கட்டி வடக்கு முகமாக வைத்து, அதில் இறந்தவருடைய ஆன்மாவைஆவாகனம் பண்ணி, எண்ணெய், அரிசிமா முதலான அபிடேகத் திரவியங்களால் அபிடேகம் செய்து, வஸ்திரம் சாத்தி, பூஜை தர்ப்பணம் செய்தல் வேண்டும். தர்ப்பணம் வாசோதகம், திலோதகம், குசோதகம் என மூன்று வகையுண்டு. புதுச் சேலையோடு சேர்த்துத் தர்ப்பணம் செய்வது, வாசோதகம். எள்ளுடன் சேர்த்துத் செய்வது திலோதகம், தர்ப்பையுடன் சேர்த்துத் செய்வது குசோதகம். தர்ப்பணம் முதல்நாள் மூன்றும், இரண்டாம் நாள் நான்கும் என்ற வகையில் ஆசௌச முடிவுநாள் வரை செய்தல் வேண்டும். முப்பது நாள் ஆசௌசிகள் 525 தர்ப்பணம் செய்தல் வேண்டும். நாளுக்கு ஒன்றாக ஆசௌசக் கணக்கிற் பிண்டம் இடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவசிராத்தம், ஏகோத்தர விருத்தி, தர்ப்பணம், சங்கிதா சிரார்த்த தானம் என்பன முறைப்படி செய்தல் வேண்டும். மூன்றுக்கும் தட்சணை கொடுக்க வேண்டும்.

**நவசிரார்த்தம்**

இது முதல்நாட் தொடங்கி, ஒற்றித்த நாட்களிற் செய்யப்படுவது. ஒழுக்கமுள்ள அந்தணர் ஒருவரை அழைத்து, இறந்தவருடைய ஆன்மா நற்கதியடைய வேண்டியதானம் கொடுத்து, அவரிடம் தான, பல தீர்த்தத்தை வாங்கிப் பாஷாணத்தின் மீது விடுவதன் மூலம், இறந்த ஆன்மாவிற்கு, பிரேதத் தன்மை நீங்கி நற்கதி கிடைக்கும்.

**சங்கீதா சிரார்த்தம்**

பதினொரு மந்திரங்களில் நேத்திரம் ஒழிந்த பத்து மந்திரங்களைப் பத்து சீலமுள்ள அந்தணர்களில் ஆவாகித்து, அவர்களுக்குச் செய்யும் தானமாகும். இதனால் தீட்சையின் பின் ஏற்பட்ட ஆசார அனுட்டானக் குறைகள் நீங்கும். உருத்திரபலி இட்டு அதன்பின் பிரபூத பலி எனப்படும் பேருணவு படைத்து, தீபாராதனை, தோத்திரம் செய்தல் வேண்டும். இறந்தவர்மேல் பாடப்பட்ட சரமகவி (கல்வெட்டு) பாடி, சுற்றத்தவர் பூவும், நீரும், இட்டு, அஞ்சலி செலுத்தல் வேண்டும்.

கல்லிலே பூசித்த ஆன்மாவைக் கும்பமூர்த்தியிடத்தும், கும்ப மூர்த்தியை அதற்குரிய இடத்திலும் ஒடுக்கி, கும்பம், கல், பிண்டம், சாம்பல் முதலியவற்றை வாத்திய ஒலியுடன் சமுத்திரம் முதலான நீர்நிலைகளில் விடுக.

நீர்நிலையில், மார்பளவு தண்ணீரில், வடக்கு முகமாக நின்று, பிண்டத்தை முதலிலும், கும்பத்தை அடுத்தும் பாஷாணத்தைப் பின்னருமாக விட வேண்டும். நீராடிவிட்டு வீட்டிற்கு வரவேண்டும்.

வீட்டு வாசலில் வேப்பிலையைத் தின்று துப்பி, ஆசமனம் செய்து, அக்கினி, தண்ணீர், கோமயம், வெண்கடுகு இவைகளைத் தொட்டு உலக்கையைக் கடந்து, கால்கை கழுவி, வீட்டினுட் செல்லவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை கூறிய கிரியைகள் சைவக் குருக்கள் செய்வதும் மேற்பட்ட வீட்டுக் கிரியைகளைப் பிராமணக் குருக்கள்மாரும் செய்வதும் நடைமுறையில் உண்டு.

**துடக்குக் கழிவு**

எமக்கு ஆசௌசம் முப்பது இரவுகள் முப்பத்தோராம் நாட்காலையில் தான் துடக்குக் கழிவு நிகழ வேண்டும். சைவ போசனமுடையவர்கள் வேறு மாமிசம் உண்பவருடன் கலப்பின்றி இருந்தால் பதினாறாம் நாளில் ஆசௌசம் நீங்கும்.

அந்தியேட்டி செய்பவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னர் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து அனைவரும் நீராடி பிராமணக் குருக்களைக் கொண்டு புண்ணியாக வாசனம் செய்து ஆளெசம் நீக்கலாம். இதன் பின்னர் தான் பாஷாண (கல்லடி)ப் படையலுக்கு உணவு தயாரித்தல் வேண்டும். ஆசௌசம் நீங்கிய மறுநாளில் ஏனைய கிரியைகளை செய்யலாம்.

**வீட்டுக்கிரியை**

வீட்டு முற்றத்தில் மெழுகி பூரணகும்பம் (நிறைகுடம்) வைத்து, தீபம் ஏற்றி பிள்ளையார் பிடித்து வைத்து, வாயிலில் மாவிலை கட்டவும், வீட்டுக் கிரியைகளில் முதலில் சங்கல்பம் செய்து, விக்கினேஸ்வர பூஜை, தீபதேவி பூஜை, பஞ்சகவ்விய பூஜை, வருண கும்ப பூஜை என்பன நிறைவேறிய பின் கர்த்தாவிற்கு பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கப்படும்.

**அனுஞ்சை**

ஒரு வாழை இலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம், காசு என்பவற்றை, கர்த்தா தலையில் வைத்து இடப்புறமாக மூன்று முறை சுற்றி, இன்ன வருடம், அயனம், ருது, மாதம், பட்சம், நட்சத்திரம், திதி, வாரம் கூடிய சுப தினத்திலே இன்னாருக்குச் சிரார்த்தம் செய்கின்றேன். அதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று குருவினிடம் வேண்ட, அவர் அதிகாரம் தந்தோம் என்று கட்டைத் தர்ப்பையைக் கர்த்தாவிடம் கொடுக்க, அதைக் கர்த்தா இடுப்பிற் சொருகிக் கொள்வர். பின்னர் வலது கை மோதிர விரலிற் பவித்திரத்தையும் வலத்தோளில் உபவீதத்தையும் அணிந்து கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரியபூசை**

சிவப்பு நிறப் பூவும் நீரும் கொண்டு, மூன்று முறை ஆத்ம பிரதட்சணம் செய்து, சூரிய மூர்த்தியை வணங்கிச் செய்யப்போகும் சிரார்த்தத்திற்குச் சாட்சியாக இருந்து அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து, முற்றத்தில் வைக்கப்பட்ட கும்பத்திற் பூவையும் நீரையும் போட்டு வழிபடவும்.

தந்தைக்கு அல்லது தாய்க்கு இடபதானம், ஏகோதிட்டம், பஞ்சதச (பதினைந்து) மாசியம், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம் என்பன செய்யப் போகின்றேன் என்று சங்கற்பம் பண்ணிக் கொள்ளவும்.

**இடபதானம்**

இறந்தவருடைய தான தருமங்களின் பலனைத் தருமத்தின் வடிவாயுள்ள இடபத்தின் மூலமாகச் சிவபெருமானிடம் சேர்க்கும் பொருட்டு இடபதானம் செய்யப்படும். இடபம்(ஆண்மாடு) தானம் செய்ய வசதிப்படாத இடத்து, ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி, அதில் இடபத்தின் வடிவை எழுதி, அதன்மேல் தேங்காய் வைத்து, கர்த்தா அத்தாம்பாளத்தை நாலு திசையிலும் இழுத்து உரிய மந்திரங்களைக் கூறித் தட்சணையுடன் அதை ஓர் அந்தணருக்குத் தானமாகக் கொடுக்கவும்.

**ஏகோதிட்டம்**

இது இறந்தவர் ஒருவரை மட்டும் குறித்துச் செய்யப்படும் தானமாகும். அந்தணர் ஒருவரை அழைத்து, மேற்கு முகமாக ஆசனத்தில் இருத்தி, அவருக்கு ஸ்நானத்திற்கு வேண்டிய நல்லெண்ணெய் , அரப்பு, எலுமிச்சம்பழம் கொடுத்து நீராடிய தாகப்பாவனைசெய்து, வேட்டி, சால்வை, சந்தனம், பூ என்பவற்றைச் சாத்தி, அரிசி, மரக்கறி என்பவற்றைக் கொடுத்துப் பூசிக்கவும்.

தரையைச் சுத்தம் செய்து, வாழை இலை போட்டு, ஒரு தருப்பையைத் தெற்கே நுனி இருக்கும் வண்ணம் வைத்து, ஒரு பிண்டம் இடவும். பச்சை அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய எட்டு, பொருட்கள் சேர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருட்டிப் பிண்டம் செய்யப்படும். கர்த்தா தெற்கு முகமாக இடது முழந்தாளையும் இடது கையையும் ஊன்றியிருந்து, கைமாறிப் பிண்டம் இடவும். சந்தனம், பூ சாத்தி, வெற்றிலை, பாக்கு, பழம், இளநீர், நைவேத்தியம், நிவேதித்து, தர்ப்பணம் செய்து நமஸ்காரம் செய்து கொண்டு, தமது சக்திக்கு ஏற்றவாறு தானம் கொடுக்கவும். இத்தானத்தினால் ஆன்மா உலக வாழ்வில் ஓரளவு திருப்தி யடையும். இதில் இருபத்திநாலு தானங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அவையாவன: பவித்திரம், பூனூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை(மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம் (சால்வை), வஸ்திரம், பொன், மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருட்கள், தாசீ, தாசர்கள் என்பனவாம். ஏகோதிட்டம் ஏற்ற குருவிற்கு தானம், தட்சணைகளைக் கொடுத்து, வழி அனுப்பி, மஞ்சள் நீர் தெளித்து, இடத்தைச் சுத்தம் செய்து கர்த்தா கைகால் கழுவி அல்லது நீராடி வந்து பஞ்சகவ்வியம் பருகிக் கொள்ளவும்.

**மாசியம்**

இறந்த வருடத்தில் மாதந்தோறும் செய்யப்படும் சிரார்த்தமே மாசிகமாகும். இது மாதந்தோறும் இறந்த திதியிற் செய்யப்படும். முதல் மாதத்திற்குரிய மாசிகம் ஏகோதிட்டம் என்ற பெயரில் முதலிற் செய்யப்பட்டது. இரண்டாம் மாதம் தொடக்கம் பதினொரு மாத மாசிகமும், ஊனமாசிகம், ஊனதிரிபட்ச மாசிகம், ஊனசாண் மாசிகமும், ஊன ஆப்திக மாசிகமும் ஆகப் பதினைந்து மாசிகம் செய்தல் வேண்டும்.

1. ஊனமாசிகம் - இறந்தநாள் முதல் இருபத்தேழு நாளின் மேல்மூன்று நாட்களுட்செய்யப்படுவது
2. ஊனதிரிபட்ச மாசிகம் - அவ்வண்ணம் நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்தாம் நாளுக்கிடையிற் செய்யப் படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஊனசாண்

மாசிகம் - மேற்கூறப்பட்டபடி நூற்றுஎழுபதாம் நாள் முதல்நூற்றெண்பதாம் நாட்களுக்கிடையில் செய்யப்படுவது

4. ஊனஆப்திக

மாசிகம் - அவ்வாறே முந்நூற்றைம்பதாம் நாள் முதல் முந்நூற்றறுபத்தைந்தாம் நாட்களுக் கிடையிற் செய்யப்படுவது.

மாதந்தோறும் செய்யும் பதினொரு மாசிகங்களும் இறந்த திதியிற் செய்யப்படும் ஊன மாசிகங்கள் நான்கும் தோஷங்கள் இல்லாத நாளிற் செய்யவேண்டும். வெள்ளிக்கிழமையிலும் நந்தை, சதுர்த்தசி, அமாவாசை என்னும் திதிகளிலும், கார்த்திகை, ஆயிலியம், பூரம், கேட்டை, மூலம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களிலும் திரிபுஷ்கரயோகம், துவிபுஷ்கரயோகம் என்பவற்றிலும் ஊனமாசிகம் செய்தல் ஆகாது.

(துதியை, சப்தமி, துவாதசி என்னும் திதிகளும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களும் ஞாயிறு, செவ்வாய், சனி என்னும் வாரங்களுமாகிய மூன்றும் கூடுவது திரிபுஷ்கரயோகம். இரண்டு கூடுவது துவிபுஷ்கரயோகம்)

பதினைந்து மாசிகங்களும் செய்ததன்மேல் வருட முடிவிற் றான் சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். ஆயினும் கர்த்தாவின் அசௌகரியங்களை உத்தேசித்து ஆசௌச முடிவிற் பதினைந்து மாசிகங்களையும் செய்து முடிப்பர். இப்படிச் செய்தாலும், பின்னரும் உரிய காலத்தில் மாசிகங்களைச் செய்வது சிறந்ததாகும்.

**சோதகும்ப சிரார்த்தம்**

இது நீர் நிரம்பிய பாத்திர (உதகம் - நீர்) தானமாகும். இறந்த ஆன்மாவின் தாகம் தீரும் பொருட்டு, இறந்த நாள் முதல் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்நூற்றி அறுபத்தைந்து நாளிலும் இத்தானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய வசதி ஏற்படாததால் இப்போது சபிண்டீகரணத்தின்முன் சோதகும்பதானம் நடைபெறும்.

**சபிண்டீகரணம்**

பண்டங்களை ஒன்று சேர்த்தல் சபிண்டீகரணம் ஆகும். இதிலே பிதிர் வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், மாத்ரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் நிமித்த (இறந்தவருக்கு)ருக்கு ஒரு பிண்டமும் இடப்படும். நிமித்த பிண்டத்தைப் பிதிர் பிண்டத்துடன் சேர்ப்பதால் இறந்த உயிர் பிரேதத்தன்மை நீங்கிப் பிதிர்த்தன்மையும் சிவலோகப் பேறும் அடையும். சபிண்டீகரணத்தின்மேற் செய்யும் சிரார்த்தங்களில், நிமித்த பிண்டம் இன்றி பிதிர்ப் பிண்டம் மூன்று இட்டுச் செய்ய வேண்டும்.

சபிண்டீகரணம் பார்வண விதானம், ஏகோதிட்ட விதானம் என இருவகைப்படும். பார்வண விதானம் பிதிர்தேவர் மூவரைக் குறித்துச் செய்யப்படுவது. ஏகோதிட்ட விதானம் குறித்த பிதிர், தேவர் ஒருவரைக் குறித்துச் செய்யப்படுவது.

தந்தை, தாய், தந்தையின் சகோதரன், அவன் மனைவி, பேரன், பேத்தி ஆகியோருக்குச் செய்யும் சபிண்டி பார்வண விதானமாய் அமையும். மனைவி, கணவன், சகோதரன், மகன், மகள், மாமன், மாமி, ஆகியோருக்குச் செய்யும் சபிண்டி ஏகோதிட்ட விதானமாய் அமையும். தந்தை தாயாருக்குச் சபிண்டி செய்யும்போது பேரன், பேத்தி உயிருடன் இருந்தால் ஏகோதிட்ட விதானமாகச் செய்ய வேண்டும்.

வீட்டுக்கிரியையைப் பொதுவாகச் சபிண்டீகரணம் என்று சொல்லும் வழக்கு இப்போது உண்டு. ஏகோதிட்டம், பதினைந்து மாசிகம், சோதகும்ப சிரார்த்தம் என்பவற்றைச் செய்த பின்பே சபிண்டீகரணம் செய்யவேண்டும். இது ஒரு வருட முடிவில் செய்யத்தக்கது. எனினும் இடையில் ஏற்படும் வசதியீனங்களைக் கருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசௌசம் நீங்கிய மறுதினத்திற் செய்யலாம். இதிலே நாலு பகுதிகளுண்டு.

1. சிவனடியார் பொருட்டு இருவர் -நந்திதேவர், மகாகாளர் (விசுவதேவர்)
2. பிதிர்த்தேவர் பொருட்டு மூவர் - கந்தர், சண்டர், கணாதீசர்
3. அதிதி அப்பியாகதர் இருவர் - முன் அறியப்படாதவர் அப்போது அங்கு வந்தவர்
4. நிமித்தர் - இறந்தவர் பொருட்டு ஒருவர்.

இவ்வாறு எண்மர் அமர்த்தப்படுவர். எண்மர் கிடைக்காத போது ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவராக நால்வரையேனும், விசுவதேவருக்கு ஒருவர் பிதிர்த்தேவருக்கு ஒருவராக இருவரை யேனும் அமர்த்தலாம். ஒருவரே அமையும்போது புயங்களில் விசுவதேவரையும், தோளுச்சியிற் பிதிர்த் தேவர்களையும் பூசிக்கலாம்.

இவர்களைச் சகல உபசாரங்களும் செய்து, வீட்டினுள் அழைத்து வந்து, தர்ப்பை ஆசனத்தில் விசுவதேவர், அதிதி அப்பியாகதரைக் கிழக்கு முகமாகவும், பிதிர்த்தேவர்களை வடக்கு முகமாகவும், நிமித்தரை மேற்கு முகமாகவும் அமர்த்துக. அவர்கள் முன் பாத்திரங்களை வைத்து, தேவ பாத்திரத்தில் நெல்லும், பிதிர்ப் பாத்திரத்தில் எள்ளும் இட்டு, பூசிக்கவும். பூனூலை வலமாக இட்டு விசுவதேவரையும், இடமாக இட்டுப் பிதிர்த்தேவரையும் பூசிக்க வேண்டும். நிமித்தரையும், பின் அதிதி அப்பியாகதரையும் பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி தானம், தட்சணை கொடுக்கவும். அவர்கள் முன்னிலையிற் சாணத்தால் மெழுகி, வாழையிலையில் தெற்கு நுனியாகத் தர்ப்பைகளை வைத்து எள்ளுச் சிதறிக் கர்த்தா, தெற்கு நோக்கி இடது முழந்தாள், இடது கையை ஊன்றியிருந்து, வடக்கிலிருந்து தெற்காக முதல் வரிசையில் பிதிர்வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், இரண்டாவது வரிசையில் மாதுரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், கிழக்கில் மூன்றாவது வரிசையில் நடுவில் இறந்தவர் (நிமித்தர்) குறித்து ஒரு பிண்டமும் இடுக. நிமித்த பிண்டம் சற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டதாய், நுனி வளைந்து மற்றப் பிண்டங்களைத் தீண்டுவதாய் அமையும்.

பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பூவும் சாத்தவும். இறந்தவர் ஆணாகில் வேட்டியும், பெண்ணாகில் சேலையும் பிண்டத்திற்குச் சாத்துக. பிண்டத்திற்கு மேற்கே அன்னம், கறிவகை, தயிர், பாயசம், பலகாரம், பழவகை, வெற்றிலை, பாக்கு என்பவற்றைப் படைக்கவும். இளநீரை, வெட்டித் திறந்து வைக்கவும். பின்னர் தூபதீபம் காட்டி வழிபாடு செய்யவும். கர்த்தாவும் உறவினரும் பூவும் நீருமிட்டு வழிபட்ட பின் திருமுறை பாடி. சரமகவி பாடித் தர்ப்பணம் செய்யவும். நிமித்த பிண்டத்தில் சாத்திய பூவை எடுத்துப் பிதிர்ப் பிண்டத்திற் சேர்க்கவும். இதனால் இறந்தவர் பிதிர்களுடன் சேர்ந்தார் எனக் கொள்ளப் படும். பின்னர் சகல பிதிர் தேவர்களையும் உத்வாசனம் செய்து, பிண்டங்களைப் பசுவிற்குக் கொடுக்கவும். அல்லது சமுத்திரத்தில் விடவும்.

வடக்குத் தெற்காக மூன்று பாத்திரமும், கிழக்கில் ஒரு பாத்திரமும் வைத்து, அவற்றுள் அர்க்கியம் (நீர், சந்தனம், பால், எள்ளு, தர்ப்பைநுனி, பூ) இட்டு மூன்று பாத்திரத்துள்ளும் பிதிர்த்தேவரையும், தனிப்பாத்திரத்தில் நிமித்தரையும் பூசித்து நிமித்தருக்குரிய பாத்திரத்தில் உள்ள அர்க்கிய சலத்தை பிதிர்தேவருக்குரிய மூன்று பாத்திரத்தில் உள்ள சலத்துடன் சேர்க்கும் நிகழ்வு அர்க்கிய சம்யோசனம் எனப்படும்.

பின்னர் குருவிற்குத் தட்சணை கொடுத்து, ஆசீர்வாதம் பெற்ற பின், குரு, கர்த்தாவிற்கு மஞ்சளால் திலகமிட்டு அதன்மேல் அட்சதையை வைத்து விடுவார். குருவை வீட்டு வாசல் வரை சென்று வழியனுப்பி, உறவினர், நண்பருடன் உணவு உண்ணவும்.

**ஆப்திகம் (ஆட்டைத்வசம்)**

ஓர் ஆண்டு முடிவிற் செய்யப்படும் சிரார்த்தமாதலால் இது ஆட்டைத் திவசம் எனப்படும். இறந்த திதியிற் செய்யும் இந்தச் சிரார்த்தத்துடன் இறந்தவரைக் குறித்துச் செய்யும் அபரக்கிரியைகள் நிறைவுறும். முக்கியமாக கவனிக்க வேண்டியது இறந்த திதி, பட்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருட சிரார்த்தம்**

சிரார்த்தமென்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப் பொருள் கொள்ளப்படும். வருடந்தோறும் இறந்த திதியில் தந்தை தாயாரைக் குறித்துச் செய்யப்படுவது சிரார்த்தமாகும். மகன் தந்தைக்குச் செய்யும் சிரார்த்தத்தில் தந்தை, பேரன், பூட்டன் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும், தமது வம்சத்தில் உள்ள பிதிர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டமும் இடல் வேண்டும். தாயாருக்குச் சிரார்த்தம் செய்யும்போது தாய், தகப்பனின் தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும் தமது வம்சத்தவருக்கு ஒரு பிண்டமும் இடல் வேண்டும்.

சிரார்த்தம் அன்ன சிரார்த்தம், ஆமசிரார்த்தம், இரணிய சிரார்த்தம், தருப்பண ரூப சிரார்த்தம் என நான்கு வகைப்படும். சிரார்த்தம் செய்ய மறந்தாலோ அல்லது திதி தெரியாமல் இருந்தால் அம்மாதத்தில் வரும் அமாவாசையில் தர்ப்பணம் செய்யலாம். அல்லது புரட்டாதி மாதத்தில் வரும் மாளயபட்சத்தில் செய்யலாம். சிரார்த்தம் செய்ய முடியாவிடில் ஆலயம் சென்று மோட்ச அர்ச்சனை செய்து வழிபடலாம். படையலுக்குச் சக்கரைச் சாதம், பழங்கள், சோறுகறி, காய்ச்சிய பால், பலகாரம் வைக்க வேண்டும்.

**அன்ன சிரார்த்தம்**

தம் மரபிலோ அன்றித் தம்மில் உயர்ந்த மரபிலோ உள்ள தீட்சை பெற்றவரை அழைத்து நிமித்த தானத்திலிருத்தி, குறித்த தானத்திற்கு உரியவராகப் பூசித்து, அமுது படைத்து, உண்பித்துச் செய்யும் சிரார்த்தமாகும். இதில் அன்னம், எள், பானீயம் (நீர்) தயிர், பால், தேன், நெய், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்துப் பிண்டமிடல் வேண்டும்.

**ஆம சிரார்த்தம்**

உணவிற்குப் பதிலாக அரிசி, காய்கறி வகைகளைப் படைத்துச் செய்யும் சிரார்த்தமாகும். இதில் அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டமிடல் வேண்டும். இவ்வெட்டுப் பொருட்களும் அட்டாங்கமெனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரணிய சிரார்த்தம்**

அன்ன சிரார்த்தம், ஆமசிரார்த்தம் செய்ய வசதியில்லாத போதும் தகுதியானவர் கிடைக்காத போதும்ட பணத்தை வைத்துச் செய்யப்படுவது இரணிய சிரார்த்தமாகும்.

**தருப்பணரூப சிரார்த்தம்**

இது அமாவாசையிற் செய்யப்படுவதாகும். அன்ன சிரார்த்ததில் அன்னபிண்டமும், ஆமசிரார்த்தத்தில் ஆமபிண் டமும் இடல் வேண்டும். அன்னசிரார்த்தத்தில் ஆமபிண்டமும், ஆமசிரார்த்தத்தில் அன்னபிண்டமும் இடுதல் குற்றமாகும்.

அன்னசிரார்த்தம் அபராணதிற் செய்தல் வேண்டும். ஆமசிரார்த்தம் சங்கவகாலத்திற் செய்து, போசனம் அபராணத் திலும் செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பிராதக் காலம் | - | சூரிய உதயம் முதல் ஆறுநாழிகை வரை. |
| சங்கவ காலம் | - | அதன்மேல் பன்னிரண்டு நாழிகை வரை |
| மத்தியானம் | - | அதன்மேல் பதினெட்டு நாழிகை வரை |
| அபராணம் | - | அதன்மேல் இருபத்திநாலு நாழிகை வரை |
| சாயான்னம் | - | அதன்மேல் முப்பது நாழிகை வரை |

சூரிய உதயம் காலை ஆறுமணியாயின்

| | | |
|---|---|---|
| பிராதக்காலம் | - | காலை 6.00 - 8.24 வரை |
| சங்கவ காலம் | - | அதன்மேல் - 10.48 வரை |
| மத்தியானம் | - | அதன்மேல் பகல் 1.12 வரை |
| அபராணம் | - | அதன்மேல் மாலை 3.36 வரை |
| சாயான்னம் | - | அதன்மேல் மாலை 6.00 வரை |
| சிவபெருமான் | - | அபிஷேகத்தாலும், விஷ்ணு - அலங்காரத் தாலும், பிதிர்கள் - தர்ப்பணத்தாலும் மகிழ்வர். |

சிரார்த்த வகைகள்

நித்திய சிரார்த்தம் - நாள்தோறும் பிதிரைக் குறித்துச் செய்யப்படும் தர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைமித்திய சிராா்த்தம் - தந்தை, தாயாா் இறந்த மாதம், திதியில் வருடம் தோறும் விதிப்படி செய்வது.

காமிய சிராா்த்தம் - அமாவாசை, சூரியகிரகணம், சந்திர கிரகணம், விதிபாதயோகம், உத்த ராயணம், சித்திரை விஷீ மாதப் பிறப்பு, வைகாசி வளர் பிறைத் திருதியை, கார்த்திகை வளர்பிறை நவமி, புரட்டாதி தேய்பிறைத் திரயோதசி, மாசி அமாவாசை ஆகிய தினங்களிற் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, பிதிர்தர்ப்பணம் செய்து அதிதிகள் சுற்றத்தாரோடு போசனம் செய்வது. இது தீர்த்த சிராா்த்த மெனப்படும்.

விருத்தி சிராா்த்தம் - இது நாந்தி சிராா்த்தம் என்றும் கூறப்படும். சீமந்தம், சாதக கர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம், விரதம், விவாகம், கிருகாரம்பம், கிருகப்பிரவேசம் போன்ற சுபகருமங் களில், பிதிர் தேவர்களைக் குறித்துச் செய்யும் சிராா்த்தம் விருத்திச் சிராா்த்தமாகும், பிதிர்களின் ஆசீர் வாதம்பெறும் பொருட்டுச் செய்யும் இச்சிராா்த்தம் மங்கள சிராா்த்தம் எனவும் கூறுவர்.

காயா சிராா்த்தம் காயாவில் செய்து பிண்டமிட்டு பிதிர்களைத் திருப்திப்படுத்துவதால் ஏழு கோத்திரத்தில் உள்ள நூற்றி யொரு குலமும் விருத்தியாகும். (பிதாவின் குலம் இருபது, மனைவி குலம் பதினாறு, சகோதரி குலம் பன்னிரண்டு, மகன் குலம் பதி னொன்று, பிதாவின் சகோதரி குலம் பத்து, மாதாவின் சகோதரி குலம் எட்டு. ஆகக் குலம் நூற்றொன்று).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி, காஞ்சி, மாயை, மதுரை, அவந்தி, அயோத்தி, துவாரகை ஆகிய முத்தித்தலம் ஏழிலும் ஏனைய புண்ணியதலங்களிலும் சிரார்த்தம் செய்வது மிகுந்த புண்ணியமாகும்.

**ஆசௌச காலத்தில் சிரார்த்தம் வரின்**

சனன மரண ஆசௌசத்திற் சிரார்த்த தினம் வந்தால் ஆசௌசம் நீங்கும் நாளில் சிரார்த்தம் செய்தல் வேண்டும். விதவை தான் வீட்டுக்கு விலக்காயிருக்கும்போது, தன் கணவனுடைய சிரார்த்தம் வந்தால், ஐந்தாம் நாள் சிரார்த்தம் செய்யக் கடவள். சிரார்த்தத்திற்குப் பாகம் பண்ணத் தொடங்கிய பின், ஆசௌசம் வந்தால் அது கர்த்தாவைப் பற்றாது.

**சிரார்த்தத்திற்கு ஆகுந்திரவியங்கள்**

நெல்லரிசி, கோதுமை, யவம் (நெல்) சிறுபயறு, உழுந்து, எள்ளு, சர்க்கரை, வெல்லம், தேன், நல்லெண்ணெய், பசுப்பால், பசுத்தயிர், பசுநெய், சிகைக்காய், மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, உப்பு, புளி, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், பாகற்காய், முள்ளிக்காய், கெக்கரிக்காய், வெள்ளரிக்காய், புடலங்காய், அவரைக்காய், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், சிறுகிழங்கு, பெருவள்ளிக்கிழங்கு, இஞ்சிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டையிலை, சேப்பந்தண்டு, சேப்பங்கீரை, சேப்பங்கிழங்கு, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி. (மிளகாய், கத்தரிக்காய் பூசணிக்காய், பயிற்றங்காய் கொடுக்கலாமென சில நூல்கள் கூறுகின்றன)

**சிரார்த்தத்திற்கு ஆகாத திரவியங்கள்**

கடலை, துவரை, வெண்கடுகு, பெரும்பயற்றங்காய், பீர்க்கங்காய், அத்திக்காய், முருக்கங்காய், பூசணிக்காய், கத்தரிக்காய், சுரக்காய், வாழைப்பூ, முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூடு, எருமைப்பால், எருமைத்தயிர், எருமைநெய், ஆட்டுப்பால், ஆட்டுத்தயிர், ஆட்டு நெய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிராா்த்தத்திற்கு ஆகும் பத்திர புஷ்பம்**

வில்வம், துளசி, அறுகு, சம்பகப்பூ, தாமரைப்பூ, புன்னைப்பூ, முல்லைப்பூ, நந்தியாவட்டைப்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர், எட்டிப்பூ.

**ஆகாத புஷ்பம்**

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ, கர்த்தாவும் சிராா்த்தத்தின் பொருட்டு வரிக்கப்பட்டவரும் சிராா்த்த தினத்திலும் முதற்றினத்திலும் மறுதினத்திலும் சவரம் செய்துகொள்ளுதல், மீண்டும் புசித்தல், வழிநடத்தல், பாரஞ்சுமத்தல், கோபம், பொய், காமம் இவைகள் தவிர்த்து விரத நியமமுடையவராய் இருத்தல் வேண்டும். விரத நியமம் தப்பிப் புணர்ர்ச்சி முதலியவற்றைச் செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். கர்த்தா இம்மூன்று தினத்திலும் எண்ணெய் தேய்த்துக் கொள்லும், பரான்னம் புசித்தலும், வெற்றிலை பாக்கு உண்ணலும், மருந்து உண்ணலும் ஆகாவாம். சிராா்த்த தினத்தில் வீட்டிலே தயிர் கடைதலும் நெற்குற்றுதலும், பிச்சை போடுதலும், எண்ணெய், நெல் முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதலும் ஆகாவாம்.

சிராா்த்த தினத்திலே, திருகோவிலிலே, கடவுளுக்குத் தன்னால் இயன்ற மட்டும் அபிஷேகம், பூஜை, திருவிளக்கேற்றுதல் முதலியன செய்தல் வேண்டும். பசுவிற்குப் புல்லுப் போடல் வேண்டும்.

சிராா்த்தம் நடக்கும்போது வேதத்தையும் திருமுறை களையும் புராண இதிகாசங்களையும் தரும சாத்திரத்தையும் சிராா்த்தம் வாங்குவோருக்குக் கேட்கும்படி படிப்பித்தல் வேண்டும். இது பிதிர்களுக்கு மிகப் பிரியமாகும்.

சிராா்த்தத்திலே கண்ணீர்விடுதலும், கோபித்தலும், பொய்சொல்லுதலும், துரிதஞ் செய்தலும், சிந்திய அன்ன த்தைக் காலாலே மிதித்தலும், இலையிலே அன்னத்தைத் தூவிப் பரிமாறலும் ஆகாவாம். சிராா்த்தமேற்பவர் நன்று, தீது என்று பேசாது திருப்தியோடு ஏற்றல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிராார்த்தத்திற்குப் பொருள் இல்லாதவன் காய், கனி, கிழங்கு, எள் இவையேனும் சற்பிராமணருக்குக் கொடுத்து நமஸ்காரம் செய்து, திலதர்ப்பணம் பண்ணிக் (திலம் - எள்ளு) கொண்டு தான் திருப்தியாகப் போசனம் பண்ணல் வேண்டும்.

**மாளயம்**

மாளயம் என்பது பிதிர் கர்மமாகும். இது மஹாளயம் என்று பெயர் பெறும். இது ஒரு பொது சிரார்த்த (திவசம்) மாகும்.

புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் மாளய பட்சமாகும். பிதிர்களைத் திருப்திப் படுத்தவும் அவர்கள் நற்கதியடையவும் பிதிர்க் கருமங்கள் செய்ய வேண்டும். இல்லறத்தானுக்குரிய கருமங்களிற் பிதிர்க் கடனும் ஒன்று. ஐவேள்விகளில் பிதிர்யக்ஞமும் (பிதிர் வேள்வி) ஒன்று.

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க நானென்றாங்
கைப்புலத்தா றொம்ப றலை'

என்பது திருக்குறள். பிதிர்களின் உறைவிடம் தென்திசை. ஆதலால் தென்புலத்தார் என்று பெயர் பெறுவர்.

சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் தெட்சணாயன காலத்தின் நடுப்பகுதி புரட்டாதி மாதமாகும். இக்காலம் சூரியன் பூமிக்கு நேரே நிற்கும் காலம். சந்திரனும் (அபரபக்கத்தில்) தென் பாகத்திற் பொருந்தியிருக்கிறது. இக்காலம் பிதிர் கருமங்களுக் கேற்றதாகக் கொள்ளப்படும்.

ஒருவர் இறந்த தினத்திற் சிரார்த்தம் (திவசம்) செய்தல் வேண்டும். இறந்த தினம் தெரியாவிட்டால் அந்த மாதத்தில் அமாவாசை அன்று செய்தல் வேண்டும். அல்லது மாளய பட்சத்திற் செய்துகொள்ளலாம். தெரிந்தோ தெரியாமலோ சிரார்த்தத்தைச் செய்யாது விட்டவர்கள், மாளய பட்சத்திற் பிதிர்க் கருமம் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பட்சம் முழுவதும் பிதிர்க் கருமம் செய்தால் வருடம் முழுவதும் செய்த பலன் கிடைக்கும். பிரதமையில் தனசம்பத்தும் துவிதியையில் பிரஜாலாபமும், திருதியையில் வளர்ச்சி லாபமும், சதுர்த்தசியில் சத்துரநாசமும், பஞ்சமியிற் சம்பத்தும், சஷ்டியிற் புகழும், சப்தமியில் கணாதிபத்தியமும், அட்டமியிற் சிறந்த புத்தியும், நவமியில் ஸ்திரீசம்பத்தும், தசமியில் இஷ்டசித்தியும், ஏகாதசியில் வேதசித்தியும், துவாதசியில் பிரஜாவிருத்தியும், தியோதசியிற் பசு விருத்தியும், சதுர்த்தியிற் புஷ்டியும் அமாவாசையில் தீர்க்க ஆயுளும் கிடைக்கும். யந்திரங்களால் இறப்போருக்குச் சதுர்த்தசியிற் பிதிர்க்கருமம் செய்வது சிறந்தது.

இப்பட்சத்தில்வரும் பரணி அட்டமி, கஜச்சாயை எனப்படும். கஜச்சாயை எனப்படுவது புரட்டாதி மாதத்தில் எந்த வாரத்திலாவது மக நட்சத்திரமும் திரயோதசித் திதியும் கூடிவருவது இது ஒரு புண்ணிய காலமாகும். இக்காலத்திற் செய்யும் கருமத்திற்கும் பலன் அதிகம்.

பிதிர்க் கருமங்கள் ஆற்றச் சிறந்த தலங்களாக அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, என்பன அமைந்துள்ளன. காயாவிற் செய்யப்படும் சிரார்த்தம் மிகவும் விசேடமானதாகும். திரயோதசியிற் செய்யும் சிரார்த்தம் காயா சிரார்த்தத்தையொக்கும்.

நாம் அனுப்பும் தபாற் காசுக் கட்டளை போன்றவற்றை, தபாற் கந்தோரில் இருப்பவர்கள் உரியவர்களிடம் கொண்டு சென்று கொடுப்பர். இதுபோலப் பிதிர்க் கருமத்திற் செய்யப்படும் தர்ப்பணம், தானம் முதலியவற்றின் பலன்களை உரியவர்கள் இருப்பிடம் அறிந்து அவர்களிடம் சேர்ப்பிப்பர். பிதிர்த் தேவதைகள் ஸ்கந்தர், சண்டர், கணாதீதர் என்போர் பிதிர்த் தேவதைகளாவர். சமய விசேட நிர்வாண தீட்சிதருக்குச் சாந்தர், சதாசிவர், ஈசர் என்போர் பிதிர்தேவதைகளாகும். பிதாவின் உயிர் ஸ்கந்த பதத்தில் ஸ்கந்த சொரூபமாகவும், பாட்டனுடைய உயிர் சண்டபதத்தில் சண்டசொரூபமாகவும், முப்பாட்டனுடைய உயிர் கணாதீதபதத்திற் கணாதீதசொரூபமாகவும் இருக்கும். இக்காலத்தில் விரதமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதிர்த்தர்ப்பணம், தானதர்மம், சாதுக்கள், அடியவர், ஏழைகள் ஆகியோருக்கு அமுதளித்தல் போன்றன செய்தல் வேண்டும். அபரக் கிரியை யாவும் இடப்புறமாகவும் பாதத்திலிருந்து சிரசுவரை பரியந்தமாகவும் செய்ய வேண்டும். கர்த்தா தெற்கு நோக்கியே கிரியைகள் இறந்தவர்களுக்குக் காட்டும் தூபம், தீபம் செய்ய வேண்டும். யாவும் இடப்புறமாகச் செய்ய வேண்டும். தலைவாழையிலையின் நுனி தெற்கே பார்க்க வேண்டும். அபரக் கிரியைகளின் போது தோரணங்கள் கட்டப்படும் முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்பிற்கும் மதிப்பிற்கு உரிய குடும்பத் தலைவி அமரர் திருமதி. சின்னத்தங்கம் பரமநாதன் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை அவரை சிறப்பாக பராமரித்த யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், தாதிமார் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பணிப்பாளர் மற்றும் உதவியாளர் களுக்கும், அன்னார் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடி வந்து உதவியவருக்கும், எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, தந்தி, மின்-அஞ்சல் மற்றும் முகபுத்தகம் வாயிலாக ஆறுதல் வார்த்தை பகிர்ந்தோருக்கும், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்தோருக்கும், துண்டுப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், இரங்கலுரை வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இன்றைய பிரார்த்தனையில் கலந்து சிறப்பித்தோருக்கும், இந்த நினைவுமலருக்கு அஞ்சலியுரை, பிரார்த் தனையுரை மற்றும் கவிதைகள் தொகுத்து அளித்தவர்களுக்கும், சிறப்பாக தொகுத்து அச்சிட்டுத் தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு "**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

* அமரர்களைக் குறிக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org